


# தமிழரசு

16.3.1996 ரூ.3








தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்
வெள்ளி விழா


வெள்ளி விழா
அடிக்கல் நாட்டுதல்
ஜெ.ஜெயலலிதா
வெள்ளி விழா
துவக்க விழா
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
புரட்சித் தலைவி
ஜெ.ஜெயலலிதா


தமிழ்நாட்டுப் பாடநூல்


தமிழ்நாட்டுப் பாடநூல்
வெள்ளி

# இந்த இதழில்...


★ கிராமக் கோயில் பூசாரிகள் பேரவை மாநாடு:
- மாண்புமிகு முதல்வர் உரை ........................ 2

★ தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெள்ளிவிழா
- மாண்புமிகு முதல்வர் உரை ........................ 9

★ மஞ்சள் மகிமை ........................................ 17

★ சீரோடு வளரும் ஈரோடு........................ 22

★ மாவீரன் அழகுமுத்துக்கோன் சிலை திறப்பு விழா:
- மாண்புமிகு முதல்வர் உரை ........................ 24

★ ஜீவா போக்குவரத்துக் கழகம் .............. 29

★ "ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாக ஒற்றுமை உணர்வுடன் வாழ்வீர்!"
- இராஜபாளையத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ........................ 33

★ பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டம் ........................ 39

★ திண்டல் வேலாயுதசுவாமி கோயில்.... 41

★ படமும் செய்தியும்........................ 43

★ பெரியாரில் அறிவொளி ........................ 45




## இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

வீழ்நாள் படாமை நன்றுஆற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல். (38)

★ ஒருவன் எந்தநாளும் தருமம் செய்தால், அது அவன் பிறவிகளை நீக்கும்.


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

பங்குனித் திங்கள் : 3

மலர்: 26 இதழ்: 18

16.3.1996

விலை: ரூபாய் 3

# "கிராமக் கோயில் பூசாரிகளின் நலன் காப்போம்!"

## பூசாரிகள் பேரவை மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, கிராமக் கோயில் பூஜாரிகளின் இரண்டாவது மாநில மாநாட்டினைத் துவக்கி வைத்து, உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், தொன்றுதொட்டு திருக்கோயில்கள் அருங்கலைகளின் இருப்பிடங்களாகவும், நமது பண்பாட்டின் பலகணிகளாகவும், நல்லொழுக்கத்தையும், நன்னெறிகளையும் போதிக்கின்ற கல்விச் சாலைகளாகவும், விளங்கி வந்துள்ளன.

பாரம்பரியச் சிறப்புமிக்க, சீரிய தமிழ்க்கலாச்சாரமும், பண்பாடும், இங்கு ஓங்கு சீர் புகழோடு விளங்குவதற்கு ஆலயங்கள் ஆற்றிய பங்கை நிச்சயமாகக் குறைத்து மதிப்பிட முடியாது. ஆலயங்கள் சமுதாயத்தின் பொதுச் சொத்துக்களாகவும், சமூக, பொருளாதார வேறுபாடுகளால் பிரிவுபடாமல் அனைவரும் சமம் என்ற உணர்வை வளர்க்கும் புனித தலங்களாகவும் திகழ்ந்து வருகின்றன.

எனவே தான் கோயில்களுக்குச் சென்று வருவதையும், இறைவழிபாட்டில் ஈடுபட்டு வருவதையும், மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஆன்மீகப் பயிற்சியாக நமது முன்னோர்கள் கருதி வந்தார்கள். நன்னெறிகளையும், நற்பண்புகளையும் வளர்த்து, மக்கள் மனங்களில் நியாய உணர்வுகள் மேலோங்கச் செய்கின்ற, நல்வழி காட்டும் நன்னெறிப் பாதைகளாகத் திருக்கோயில்கள் தமிழகத்தில் செயல்பட்டு வந்துள்ளன.

முதல் அமைச்சர் சொல்லும் கட்டுரை

திருக்கோயில்களைத் தங்கள் சமூக வாழ்க்கையின் தவிர்க்க முடியாத அங்கங்களாகத் தமிழகத்து மக்கள் ஆண்டாண்டு காலமாக கருதி வருகின்றார்கள் என்பதையும், நான் நன்கு அறிவேன்.

எனவேதான், நாங்கள் ஆட்சிக்கு வந்த உடன், எங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடியே, அனைத்து மக்களும் மகிழ்ச்சி அடையும் வண்ணம், சிதிலம் அடைந்து பாழடைந்து கிடந்த, பல்வேறு திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளை, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டோம்.

எந்த ஒரு அரசு, மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப தனது கொள்கைகளுக்கு வடிவம் கொடுத்து, காலத்திற்கேற்ப ஜனநாயக உணர்வுடன் செயல்பட்டு வருகின்றதோ, அந்த அரசுதான் உண்மையிலேயே, மக்கள் நல அரசாக விளங்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்த உணர்வின் அடிப்படையில் நாங்கள் திருக்கோயில்களின் புனரமைப்பை மேற்கொண்டபோது, சிலர் எங்களைத் திசை திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால், நாங்கள் எங்கள் கொள்கைகளில் உறுதியாக நின்றோம். தமிழகத்துப் பெருமக்களின் மனங்களை நான் நன்கு அறிந்து வைத்திருந்ததே அதற்குக் காரணம். மக்களின் எண்ணங்களுக்கு ஏற்ப நமது செயல்பாடுகள் அமையும் போது, இயற்கையாகவே மக்கள் சக்தியின் பேராதரவும், பேரன்பும் நமக்குப் பரிபூரணமாகக் கிடைத்து விடும் என்பதை எங்கள் ஆலயத் திருப்பணிகள், இந்த உலகத்திற்குத் தெள்ளத்




தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

ஏராளமான சொத்துக்கள் இருந்தும், பல கோயில்கள் நிரந்தர வருமானமின்றி பொருளாதாரச் சீரழிவில் சிக்கித் தவித் ததையும், பல ஆண்டு காலமாகப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படாததால் புராதனக் கட்டடங்களும், கலை வடிவங்களும் சிதிலமாகி வருவதையும் அறிந்து இவற்றைத் தடுக்க, நாங்கள் 'தமிழ்நாடு திருக்கோயில் நிருவாக வாரியம்' ஒன்றை ஏற்படுத்தினோம்.

திருக்கோயில்களின் புனரமைப்பிற்கும், சீரிய பராமரிப்பிற்கும், தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்ட "தமிழ்நாடு முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி" ஒன்றை நான் ஏற்படுத்தினேன் இந்த நிதியில் இன்று வரை வட்டித் தொகையுடன் சேர்த்து, 8 கோடியே 37 இலட்சம் ரூபாய் சேர்ந்துள்ளது என்பது மகிழ்ச்சித் தரக் கூடிய ஒரு செய்தியாகும்.

இந்த நிதிக்கு வாரி வழங்கிய நல்ல மனம் படைத்தவர்களுக்கு, இந்த நேரத்தில் என் இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் பல்வேறு திருக்கோயில்களின் புனரமைப்பிற்கும், மேம்பாட்டிற்கும் இந்த நிதியிலிருந்து இதுவரை 4 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது ஒரு மாபெரும் சாதனை ஆகும். 62 திருக்கோயில்களின் திருப்பணிக்கும் கன்னியாகுமரி தேவஸ்வோம் வாரியத்தின் பணிகளுக்கும் இதுவரை 2 கோடியே 72 இலட்சம் ரூபாய், நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ஒருகாலப் பூஜைத் திட்டத்தின் கீழ் 6,238 திருக் கோயில்கள் பயன்பெறும் வகையில், 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், தமிழகத்தில் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில், ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. தமிழக மக்களின் மனங்களில் கோயில்களைப் புனரமைக்க வேண்டும் என்று ஆழமாகப் பதித்திருந்த ஒரு ஆத்மார்த்த விருப்பத்திற்கு நாம் செயல் வடிவம் அமைத்துக் கொடுத்தோம் என்கிற மன நிறைவு எங்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

கோயில்கள் பொது மக்களின் சொத்துக்கள் , ஜாதி சமய வேறுபாடின்றி அனைவரும் கூடுகின்ற சமுதாயக்கூடங்கள், கல்விச்சாலைகள் என்கின்ற உணர்வோடு பார்க்கும் போது ஆலயத் திருப்பணி உண்மையிலேயே ஒரு உன்னத சமுதாயப் பணி என்பதில் சந்தேகம் இல்லை.

நமது மாநிலத்தில் உள்ள பல திருக் கோயில்களைச் சீரமைத்தும், புனரமைத்தும், கும்பாபிஷேகங்களை நடத்தி வருவதும், மக்களின் உள்ள உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கிற ஒரு செயல் என்பது தான் உண்மை.

எங்கள் ஆட்சிக் காலத்தில், கலைப் பொக்கிஷங்களாக விளங்கும் தொன்மை மிகுந்த 680 திருக்கோயில்களில் திருப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக, 1995-ஆம் ஆண்டில் மட்டும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுப் புதுப்பொலிவு பெற்ற திருக்கோயில்களின் எண்ணிக்கை 315 ஆகும். தற்போது 37 கோடி ரூபாய் செலவில், 702 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"ஒரு காலப் பூஜை" திட்டத்தின் கீழ், தலா 25,000 ரூபாயில் அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டு, 6,233 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்த 15 கோடியே 60 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பெரிய திருக்கோயில்களுக்கு மட்டுமின்றி, கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய கோயில்களின் புனரமைப்பும், சீரமைப்பும் அவசியம் என்பதை நாங்கள் நன்கு உணர்ந்து உள்ளோம். அத்தகைய கிராமக் கோயில்களைப் பராமரித்து, அப்பகுதி வாழ் மக்களின் இறை உணர்வுக்குத் தூண்டு கோலாக விளங்கிவரும் கிராமக் கோயில் பூஜாரிகள் அனைவரும் நமது பாராட் டிற்கும் அன்பிற்கும் உரியவர்கள் ஆவார்கள்.

இதுவரை கவனிக்கப்படாமலேயே இருந்த, எத்தனையோ துறைகளை எடுத்து, அவற்றிற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அவற்றிற்குப் புதிய பொலிவினை, ஏற் படுத்தித் தந்த அரசு, எங்கள் அரசு. அதே உணர்வுடன், கிராமக் கோயில்களின் திருப்பணியிலும், கிராமக் கோயில் பூஜாரிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திலும் ஒரு புதிய பொலிவினை ஏற்படுத்த எங்கள் அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள், கிராமக் கோயில்களின் பெருமைகளையும், பராம்பரிய சிறப்பையும், கிராமத் தேவதை களைத் தமிழக மக்கள் வழிபட்டு வருவதையும், சுட்டிக் காட்டினார்கள். கிராமக் கோயில்களைப் புனரமைக்கவும், கிராமக் கோயில் பூஜாரிகளின் நலன் காக்கவும், என் முன் வைக்கப்பட்ட பல கோரிக்கைகளை, இந்த இடத்திலேயே ஏற்றுக் கொண்டு, அவற்றிற்கான அறிவிப்புகளை இதே விழா மேடையில் வெளியிடுவதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

---

**★ பெற்றோர்கள்தாம் வரதட்சணைக் கொடுமையில், முன்னணிக் குற்றவாளிகளாயிருக்கின்றனர். தாங்கள் தம் மகனின் கல்விக்காகச் செலவழித்த பணம், தம் கடமையைச் சேர்ந்தது என்று கருதாதபடி, ஏதோ ஒரு வியாபாரத்தில் போட்ட முதலீடாகக் கருதிக் கொண்டு அந்த முதலீட்டையும், வட்டியையும் சேர்த்து, அவனுக்கு வரப் போகின்ற மனைவி மூலமாக வசூல் செய்துவிட வேண்டுமென்றே கருதுகின்றனர்.**

**தந்தை பெரியார்**

---

1. கிராமக் கோயில் பூஜாரிகளாகச் செயல்பட்டு, முதுமையின் காரணமாக அந்தப் பணிகளை மேற்கொள்ள இயலாமல், ஓய்வு பெற்ற நிலையில் உள்ள பல பெரியவர்கள், வருமானம் ஏதுமின்றி, வறுமையில் வாடி வருகிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அத்தகைய பெருமக்களின் சேவையை நினைவு கூர்ந்து, அவர்களின் பொருளாதார உயர்வுக்கு வழி வகுக்க, அவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். "கிராமக் கோயில் பூஜாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்" கீழ் 20 ஆண்டு காலம் பூஜாரிகளாகச் செயல்பட்ட 60 வயதைக் கடந்த பூஜாரி களுக்கு, 400 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டமாக, 1,500 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. வயதான அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேத பாராயணம் செய்வோர் மற்றும் இசை கலைஞர்கள் ஆகியோருக்கு எங்கள் அரசு

மாதமொன்றுக்கு 300 ரூபாய் ஓய்வூதியம் வழங்கி வருகின்றது. இந்த ஓய்வூதியத் தொகை 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வு 1.4.1996 முதல் அமல் செய்யப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

3. சிதிலமடைந்த பல திருக்கோயில் களில், புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருவதைப் போலவே, கிராமக் கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமக் கோயில்கள் திருப்பணிகள் திட்டத்தின் கீழ், கிராமக் கோயில்களின் புனரமைப்பிற்காக, 5,000 ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்படும். தமிழகத்தில் அமைந்துள்ள கிராமக் கோயில்கள் அனைத்தும் பரவலான முறையில் பயன் பெறும் வண்ணம், ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் அந்தத் திருப்பணிகளுக் கென, ஒதுக்கீடு செய்து செலவிடப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. எங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும், ஒரு காலப் பூஜை திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட, 25,000 ரூபாய்க்கான அறக்கட்டளையிலிருந்து கிடைக்கும் மாதாந்திர வட்டித் தொகை, இந்து அறநிலைய ஆட்சித் துறை அலுவலர்கள் மூலமாக, பூஜாரிகளுக்குச் சென்றடைவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தக் குறையைப் போக்கிட ஒரு காலப் பூஜை திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை, இனிமேல் அர்ச்சகர்களுக்கும், பூஜாரிகளுக்கும் நேரடியாக வழங்கப்படும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தகுந்த ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. வணிக அமைப்புகளுக்கான மின் கட்டண விகிதத்தின் அடிப்படையில் கிராமக் கோயில்களிடமிருந்து மின் கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும், இதனால் கிராமக் கோயில்கள் பல பாதிக்கப்பட்டு உள்ளதெனவும் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கிராமக் கோயில்களுக்கு மின் கட்டணத்தில் என்னென்ன சலுகைகள் வழங்க முடியும் என்பதை ஆராய்ந்து, விரைவில் அதற்கான ஆணைகள் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. தற்போது கிராமக் கோயில்களில் பல்வேறு பூஜை முறைகள் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றன. சரியான பயிற்சி இல்லாததால், பல கோயில்களில் பூஜை முறைகள் சரிவர மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டு வருவதையும் நான் நன்கு அறிவேன். எனவே, பூஜை முறைகள் குறித்த முறைப்படியான பயிற்சிகள், கிராமக் கோயில் பூஜாரிகளுக்கும் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் திருச்சியில் துவக்கப்பட்ட வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம், கிராமக் கோயில் பூஜாரிகளுக்கும் முறைப்படி புத்தொளிப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கான பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு, பயிற்சி வகுப்புகள் விரைவில் துவக்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

7. கிராமக் கோயில் பூஜாரிகளுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையும் என் முன்பு வைக்கப் பட்டுள்ளது. தற்போது தமிழக அரசால்

**படித்தவன் உழ வேண்டும்; உழுபவன் படிக்க வேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க - உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்!**

**—பேரறிஞர் அண்ணா**

செயல்படுத்தப்பட்டு வரும், தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த பூஜாரி பெரு மக்களுக்கு, முன்னுரிமையின் அடிப் படையில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரித்துக் கொள்கிறேன். இதர இனத்தைச் சேர்ந்த பூஜாரிகளுக்கும், கூட்டுறவுத் துறையின் மூலம் வீட்டு வசதி ஏற்படுத்தித் தரும் திட்டம் ஒன்று எங்கள் அரசால் விரைவில் செயல்படுத்தப்படும் என்ப தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. கிராமக் கோயில்களுக்குச் சொந்த மான நிலங்களில் ஏற்படுகின்ற ஆக் கிரமிப்புகளை அகற்றுவற்கும் எங்கள் அரசு நிச்சயமாக உறுதுணையாக விளங்கும். கிராமக் கோயில் பூஜாரிகள், கிராமக் கோயில்களின் சொத்துக்களில் ஏற் பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவ தற்கும், அத்திருக்கோயில்களின் சொத்துக் களைப் பாதுகாப்பதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகினால், முன்னுரிமை யின் அடிப்படையில் அவர்களது குறைகளைத் தீர்த்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கான ஆணைகளை எங்கள் அரசு வழங்கும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. கிராமக் கோயில் பூஜாரிகள் மரண மடைந்தால் அவர்களது குடும்பம் வறுமையில் வாடாமல் இருக்க நிவாரண உதவித்தொகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையும் என் முன்பு வைக்கப் பட்டுள்ளது. அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, இனி கிராமக் கோயில் பூஜாரிகள் மரணமடைய நேரும்போது அவர்களது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்னும் சில கோரிக்கைகள் என் முன்பு வைக்கப்பட்டுள்ளன. அவற்றை யெல்லாம் கனிவுடன், பரிவுடன் பரிசீலித்து தக்க முடிவுகளை விரைவில் அறிவிப்பேன் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமக் கோயில் பூஜாரிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், பொரு ளாதார மேம்பாட்டிற்கும், நல்வாழ்விற்கும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, உற்ற துணையாக, அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு அரணாக என்றென்றும் விளங்கும் என்று உறுதி கூறுகிறேன்.

இந்த சீரிய விழாவில் நல்ல இறை உணர்வையும், சமுதாய நல்லுணர்வையும் ஒன்றுபடுத்தி, ஒரு புதிய ஆன்மீக உணர்விற்கு வழிவகுத்த, காஞ்சிப் பெரியவர் ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் கலந்துகொண்டிருப்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. காஞ்சிப் பெரியவர் அவர்களுக்கும், காஞ்சி பால பெரியவர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிப் பெரியவர் அவர்கள் ஆசி வழங்குகின்றபோது, இதுவரையில் இந்தச் சிறியவள் ஆட்சிக் காலத்தில் செய்த சில பணிகளைப் பாராட்டி பேசினார்கள். அதை என் வாழ்க்கையில் நான் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

எங்கள் அரசு தொடர்ந்து ஆலய திருப்பணிகளில் ஈடுபட்டு, ஆலயப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு உறுதுணை யாகவும், பாதுகாப்பாகவும் விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும் எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற நிறைந்த மனதோடு நெஞ்சார வாழ்த்தி விடைபெறுகிறேன்.



# சக்தி சர்க்கரை ஆலை

கோவை-18

உயர்தர வெண்படிக சர்க்கரை, எரிசாராயம், மாசு கட்டுப்பாடு
உபகரணம், சோயா எண்ணெய் மற்றும் வார்ப்பகப்
பொருட்கள் உற்பத்தியாளர்கள்

தலைமை & பதிவு அலுவலகம்

*180*, ரேஸ்கோர்ஸ் ரோடு, தபால்பெட்டி எண் *3775*,
கோயம்புத்தூர் - *641 018*

## சர்க்கரை ஆலைகள்

**சக்திநகர் - 638 315**
பவானி தாலுக்கா
பெரியார் மாவட்டம்

**சுனாபால்**
படம்பகார் - *754 031*
கட்டாக் மாவட்டம்
ஒரிஸ்ஸா

**கண்ணாரிருப்புமாத்தூர்**
படமாத்தூர் - *623 560*
சிவகங்கை தாலுக்கா
பசும்பொன்தேவர் திருமகன் மாவட்டம்

**கொரியன்**
ஹரிப்பூர் - *759 013*
தென்கனால் மாவட்டம்
ஒரிஸ்ஸா

## வார்ப்பகப் பிரிவு

**பல்லக்கவுண்டன் பாளையம்**
பெருந்துறை தாலுக்கா,
பெரியார் மாவட்டம்

**சக்தி சோயாஸ் டிவிசன்**
மாசிநாயக்கன் பாளையம்
அம்பிராம்பாளையம் (P.O.)
பொள்ளாச்சி தாலுக்கா - *642 103*

நல்வாழ்த்துக்கள்

AGNI

# AGNI STEELS

# PRIVATE LIMITED

**Admn. Office: 58-A, Perundurai Road, G.K. Complex, Opp. Rana, Erode-638 011**

**Phone: Off: 215426, 216871, Grams: Agni , Fax: 04294 - 20560, Telex: 0856-230 (Attn. Agni)**

கட்டடங்களுக்குத் தேவையான

தரம்மிக்க முறுக்குக் கம்பிகள் 10 m.m. to 25 m.m.,

M S ரவுண்ட், M S பட்டா

தயாரிப்பாளர்கள்

**அக்னி ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்,**

**ஈரோடு**

**போன்: 215426, 216871**

**ஈங்கூர், பெருந்துறை**

**போன்: 04294, 20560, 26229, 26211**

Regd Office: 2, Mohan Kumaramangalam Street, Surampatti, Erode - 638 009. TNGST No. 152/2900829, CST No. 440327/10-1-90

Factory: Kavandanur Road, Ingur - 638 058, Perundurai (Tk) Phone: STD: 04294-26229, 26211, 26212

**இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி**

# தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் வெள்ளி விழா

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் வெள்ளி விழா கடந்த 1.3.96 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கத்தில் புதுமையோடும், பொலிவோடும் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கலைவாணர் அரங்கம் வழியெங்கிலும் கலைநயத்தோடு பொன்னிற அணங்குச் சிலைகள் அழகுற வைக்கப் பட்டிருந்தன. அவைமீது மாலை நேர மஞ்சள் வெயில் பட்டு ஒளிவீசியது. அதனால் பக்கத்திலிருந்த வண்ணத் தோரணங்கள் தங்கத் தகடுகள் போல காற்றில் தவழ்வதைக் காண முடிந்தது.

வண்ணச் செடிகளாலும், பலநிறப் பூக்களாலும் வேயப் பட்ட அழகான கூண்டுப் பாதை அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்க அழகுணர்வோடு வடிவமைக்கப்பட்ட அப்பாதை யாவரையும் கவர்ந்தது.

அதனைக் கடந்து அரங்கினுள் வந்தபோது, மேடையின் பின்னணியில் பசுமையே எங்கும் விரிந்து பரவியிருந்தது. மேடையின் இருபுறங்களிலும் வீணை இசைக்கும் பெண்ணின் உருவச்சிலை எடுப்பாக பொன்னிறத்தில் பளிச்சிட்டது. கல்வி சார்ந்த விழா என்பதால் கலைமகளின் திருவுருவமோ அல்லது முத்தமிழின் மூன்றாவது அங்கமான இசைத்தமிழின் உருவகமோ என்று எண்ண வைத்தது.

விழாவுக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையேற்றார். தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு எப்.எம். இராசரத்தினம் அவர்கள் உணர்ச்சி மிகு வரவேற்புரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து வெள்ளிவிழா நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்தார்.

விழாவில், காஞ்சிபுரம், கடலூர், நாகர்கோவில், ஆகிய இடங்களில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வட்டார அலுவலகங்களும், பணியாளர் குடியிருப்புகளும், கிடங்குகள், விருந்தினர் இல்லம் ஆகிய கட்டடங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மங்கல இசை முழங்க அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது பேருரைக்குப் பின்னர் வெள்ளி விழா சிறப்பு மலரை வெளியிட முதல் பிரதியை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார். பிறகு, 1995-ஆம் ஆண்டில் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புத் தேர்வுகளில் தமிழ்ப் பாடத்தில் மாநில அளவில் முதல் மற்றும் இரண்டாவது இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகள் திரு விவேக், செல்வி தூவுத் பேகம், செல்வி மீனாட்சி, திரு மகேஷ் ஆகியோர்களுக்கு 2 சவரன் தங்கப் பதக்கமும், சான்றிதழ் மற்றும் நினைவுப்பரிசுகளும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 10-ஆம்

# மின்னணுப் பலகையில் மின்னிடும் புரட்சித்தலைவியின் புகழ்க்கோவை!

## இதுவரை இல்லாத புதுமை

நிமிர்ந்த நடையும்
நேர்கொண்ட பார்வையும்
கொண்ட புரட்சித்தலைவியே
வருக! வருக!
பெண்குலத்தின்
பொன்விளக்கே!
அன்போடு அருள்
செய்யும் அன்னையே
வருக! வருக!
பாடநூல் கழகமாம்
அறிவுக்கோட்டத்தை
அறக்கோட்டமாக்கிய
அற்புதத் தலைவியே
வருக! வாழ்க!
தமிழர்தம் வாழ்வுக்கு
விளக்கேற்றும் அன்னையே
வருக! வருக!
பாசப் பிணைப்பில்
கட்டுண்டு களிப்புறும்
மாசற்ற தலைவியே வருக!
வருக!
விளையாட்டுத் துறையில்
மறுமலர்ச்சி கண்ட
வீரத்திருமகளே வருக!
வருக!
சமூக நீதி காத்த
வீராங்கனையே வருக! வருக!
சத்துணவு நல்கிடும் சரித்திர
நாயகியே வருக! வருக!
ஏழைகள் வாழ்வு
ஏற்றம் பெற
அள்ளி வழங்கும் வெள்ளி
விழா நாயகியே வருக!
வருக!
எங்கள் தங்க முதல்வரே
வருக! வருக!
அறிவுச் சுடரே! அருந்தவ
முதல்வரே வருக! வருக!
மாதர்குல மணிவிளக்கே!
மாண்புமிகு முதல்வரே
வருக! வருக!
சாதனைகளின் இமயமே!
முதல்வரே வருக! வருக!
அருளாசி வழங்கும்
அன்னையே வருக! வருக!

சென்னைக் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் வெள்ளி விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வரவேற்கும் மேலே காணப்படும் சொற்கோவைகள், மேடையின் முன்னால் அமைக்கப்பட்டிருந்த மின்னணு பலகையில் (Electronic Display Board) வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக போட்டிப் போட்டுக்கொண்டு வந்தன. பொருள் பொதிவுமிகுந்த அந்த வார்த்தைக் கோலங்கள் புதுமையாகவும், அதே நேரத்தில் கலைவாணர் அரங்கில் இது வரை நடைபெற்ற விழாக்களில இல்லாத தனிச்சிறப்பாகவும் இருந்தது. எல்லோரையும் கவர்ந்த இந்த மின்னணுப் பலகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்து மகிழ்ந்தார்.

---

வகுப்பு, 12-ஆம் வகுப்புகளில் தமிழ்ப் பாடத்தில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பணப் பரிசும், சான்றிதழ்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப் பட்டன.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தில் 25 ஆண்டுகள் பணி முடித்த ஊழியர்களுக்கும் பணப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன. அவ்வூழியர்களுள் ஒருவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் காலில் விழுந்து வணங்கிய போது, பார்வையாளர்கள் கூட்டத்தில் மகிழ்ச்சி ஆரவாரம் ஏற்பட்டது.

மாண்புமிகு முதல்வர் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில் ரூ.50 இலட்சத்துக்கான காசோலையை அழகிய பேழைக்குள் வைத்து தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் தலைவர் திரு எப்.எம். இராசரத்தினம் வழங்கிச் சிறப்பித்தார்.

விழாவில், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு பொன்னுசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் தமிழ்நாடு அரசு கல்வித்துறைச் செயலாளர் திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை யாற்றினார்.



விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள் கலந்து கொண்டார்கள். சிறப்பான இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல சிறப்புத் திட்டங்களை மகிழ்வோடு அறிவித்தார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
எம்.வி.எம். அசோகன்

## தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பணிகள்

- 1970-ஆம் ஆண்டு பாடநூல் நிறுவனமாக தொடங்கப் பெற்றது. 1993-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகமாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் உயர்த்தப் பட்டது.

- 63 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ.24 கோடி மதிப்பீட்டில் இலவசப் பாடநூல்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

- 1970-71-ஆம் கல்வியாண்டில் 36 தலைப்புகளில் 61.24 இலட்சம் பிரதிகள் மட்டும் வெளியிடப்பட்டன. தற்போது (1995-96) 384 தலைப்புகளில் 500 இலட்சம் பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

- ரூ.32 இலட்சம் மதிப்பில் 10,000 கிராமப்புற நடுநிலைப் பள்ளி நூலகங்களுக்கு 10 தொகுதிகள் கொண்ட 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்' அச்சிட்டு வழங்கப் பட்டுள்ளது.

- மாநில அளவில் தமிழ்ப் பாடத்தில் முதன்மை இடத்தைப் பெறும் மாணவ, மாணவியருக்குப் 'புரட்சித் தலைவி' அவர்கள் பெயரால் 'தங்கப்பதக்கம்' பரிசுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



# "மனித வளத்தை உயர்த்த நாம் மேற்கொள்ளும் செலவினம் வளரும் தலைமுறையினரின் உயர்வுக்கான மூலதனம்"

## –மாண்புமிகு முதல்வர் உரை

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் நேரில் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3-ஆம் நாளன்று தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமாக அதாவது Tamil Nadu Text Book Society ஆக ஒரு சிறிய அமைப் பாக தனது பணியைத் தொடங்கிய இந்த நிறுவனம், இன்று கல்வி வளர்ச்சியில் தன்னை முழுமை யாக அர்ப்பணித்துக் கொண்டு ஆலவிருட்சமாக வளர்ந்துள்ளது.

36 பாடநூல் தலைப்புகளில் மட்டும் பாட நூல்களை அச் சிட்ட நிறுவனம் இன்று 384 பாட நூல் தலைப்புகளில் புத்தகங் களை வெளியிட்டு வருகின்றது. 61 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பிரதிகளை மட்டுமே அச்சிட்டு, தனது பணியைத் துவக்கிய இந்த நிறுவனம் 26 கோடி ரூபாய் மதிப்புள்ள விற்பனைப் பிரதி களையும், இலவச பாடநூல் திட்டத்தின் கீழ் 31 கோடி ரூபாய் மதிப்பில் இலவச பிரதிகளையும் அச்சிட்டு வழங்கி வருகிறது. ஒரு துடிப்புள்ள மக்கள் சேவை நிறுவனம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருந்து வரும் நிறுவனம் இது என்பதற்கு இதை விடப் பெரிய சான்று அவசிய மில்லை என்று கருதுகிறேன்.

பாடநூல் தலைப்புகளின் எண்ணிக்கையும், அச்சிடும்

பிரதிகளின் மதிப்பு மட்டும் உயர்ந்துள்ளதால், இந்த நிறுவனம் உயர்ந்து விட்டதாக நான் கருதவில்லை. ஆனால் ஆண்டுக்கு ஆண்டு பாடநூல்களின் தரத்தை உயர்த்துவதிலும், இதர கல்விப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதிலும், காட்டி வரும் ஆர்வத்தால், இந்த நிறுவனம் உயர்ந்து நிற்பதாக நான் கருதுகிறேன்.

பாடநூல்களை அச்சிட்டு வழங்கும் ஒரு வணிக அமைப்பாக, ஒரு சிறிய கட்டத்திற்குள் அடைப்பட்டு விடாமல், தமிழக அரசின் மனித வள மேம்பாட்டுக் கொள்கைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் ஒரு தூண்டுகோலாக இந்த நிறுவனம் திகழ்ந்து வருகிறது.

ஒரு நிறுவனம் 25 ஆண்டுகள் செயல்பட்ட ஒரே காரணத்தால் கொண்டாடப்படும் விழா அல்ல இந்த வெள்ளி விழா. காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, கல்விப் பணியை கடமை உணர்வுடன் ஆற்றிய, ஒரு நிறுவனம் தனது சாதனைகளைப் பெருமிதத்தடன் நினைத்துப் பார்க்கும் ஒரு வெற்றி விழா. அதுவும் எங்கள் ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு சங்கமாக இருந்த இந்த அமைப்பு, 1993-ஆம் ஆண்டில் ஒரு கழகமாக அதாவது ஒரு **Corporation**ஆக வளர்ந்து, உபரி நிதியை பல நற்பணிகளில் செலவிடும் நல்லதொரு அமைப்பாக மாறியுள்ளதை எண்ணி, நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஏனென்றால் வெற்று நாட்களை எண்ணி, மகிழ்ச்சி அடைபவர்கள் அல்ல நாங்கள்! வாழ்நாளில் நற்பணிகளை மேற்கொண்டு செயல்படும் நாள் எல்லாம் வெற்றி நாட்களாக கருதும் மனம் படைத்தவர்கள்.

> **வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.**
>
> **–தந்தை பெரியார்**

மனித வள மேம்பாட்டிலும், மனித வள ஆற்றலைப் பெருக்குவதிலும், எங்கள் அரசு ஆரம்பத்திலிருந்தே ஒரு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றது. மனித வளத்தையும், மனித ஆற்றலையும் பெருக்குவதன் மூலம் தான் இந்த நாட்டிலிருந்து கல்லாமையையும், இல்லாமையையும் ஒரு சேர விரட்டி அடிக்க முடியும் என்பதை, நாங்கள் நன்கு உணர்ந்து செயல்பட்டு வருகிறோம்.

மனித வளத்தை உயர்த்த நாம் மேற்கொள்ளும் செலவினம், வளரும் தலை முறையினரின் உயர்வுக்கான மூலதனம் என்பதை, எங்கள் அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் மூலம் நிரூபித்துக் காட்டி உள்ளோம். "அனைவருக்கும் ஆரம்பக் கல்வி" என்பதை நாங்கள் கட்டாயம் ஆக்கி யுள்ளோம். அதுமட்டுமின்றி, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, "ஆரம்பக் கல்வியை" கட்டாயமாக்கி, அதை அமல்படுத்த ஒரு சட்டத்தையும் இயற்றிய ஒரே அரசு எங்கள் அரசு தான்.

இரண்டாயிரம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளும் குறைந்தபட்ச ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற உன்னதமான சூழ்நிலையை நாங்கள் நிச்சயம் உருவாக்கிக் காட்டுவோம்.

குறிப்பாக பெண் கல்வி வளர்ச்சி இன்று புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் 1.38 கோடி குழந்தைகளில், 61 இலட்சத்து 79 ஆயிரம் பேர் மாணவியர்களாக இருக்கிறார்கள். அதாவது, பள்ளிகளில் பயில்பவர்களில் கிட்டத்தட்ட 45 சதவிகிதம் பேர், பெண் குழந்தைகள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும். இந்த நிலை மேலும் உயரும் போது ஏற்படும் சமுதாய மறுமலர்ச்சி, ஒரு சீரிய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பது உறுதி.

கல்வி வளர்ச்சியில், பாடநூலின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனென்றால் பாட நூல்களும், பாடத் திட்டங்களும், இளைய தலைமுறையினரின் மனங்களைப் பக்குவப்படுத்தி, நன்னெறிகளை அவர்கள் உள்ளத்தில் பதிய வைத்து, நல்வாழ்வியல் கோட்பாடுகளையும், தத்துவங்களையும் உணரச் செய்து எதிர்கால சவால்களுக்கு அவர்களைத் தயார் செய்யும் மாபெரும் சாதனங்களாக அமைந்துள்ளன. கற்றல் கற்பித்தல் இரண்டிற்கும் அடிப்படையாக விளங்குவது பாடநூல்.



சென்னை தலைமைச் செயலகத்தில் ஆதிதிராவிட நல உயர் மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோம சுந்தரம், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (5.3.96)

இளம் இதயங்களைப் பண்படுத்தும் சக்தி வாய்ந்த ஒரு ஆயுதம் பாடநூல் என்பதில் ஐயமில்லை. எனவே தான் பாடநூல்களைத் தெரிவு செய்வதிலும், அவற்றை முறைப்படி அச்சிட்டு வழங்குவதிலும், எங்கள் அரசு ஒரு புதிய முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கைப்படி, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை, பாடத் திட்டத்தை அதாவது Syllabus-ஐ காலத்தின் தேவைகளுக்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும். அதன் அவசியத்தை உணர்ந்து, ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கான பாடத் திட்டங்களை மாற்றி அமைக்க, ஏற்பாடுகள் செய்த ஒரே அரசு, இந்த இந்தியத் துணைக் கண்டத்திலேயே, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான் என்பதை மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

University Grants Commissionனின் தலைவர் பேராசிரியர் Yashpal Sharma அவர்களின் தலைமையில் அமைந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், சுமையின்றிக் கற்றல் அதாவது Learning without burden என்ற கொள்கையின் அடிப்படையிலும், பேராசிரியர் Davey அவர்களின் தலைமையின் அமைந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும் "குறைந்தபட்சக் கற்றல் இலக்குகள்" அதாவது (minimum Levels of Learning) என்கின்ற புதிய கோட்பாடுகளை அமைத்து, அதன் அடிப்படையில் புதிய பாடத் திட்டங்களையும், பாட நூல்களையும் உருவாக்கி வருகின்றோம்.

அறிவியல் அணுகுமுறைகளைக் கையாண்டு, உடற்கல்வி மற்றும் உடல்நலக் கல்விகளுக்காக, தனித் தனியே பாட நூல்களை எங்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் வெளியிட்டுள்ளோம். இளம் நெஞ்சங்களில் அறிவியல் உணர்வை வளர்க்க, 10 தொகுதிகள் அடங்கிய "குழந்தைகள் அறிவியல் கலைக் களஞ்சியம்" ஒன்றை, இந்த நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது. மொழிச் சிறுபான்மையினரின் நலனைக் கருத்தில் கொண்டு, கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது ஆகிய மொழிகளிலும் பாட நூல்களை, இந்த நிறுவனம் அச்சிட்டு வெளியிட்டு வருகிறது.

இந்தக் கழகம் பாட நூல்களைத் தயாரித்து வழங்குவதோடு, மாணவ, மாணவியர்களிடையே கல்வி ஆர்வத்தை மேலும் ஊக்குவிக்க, பல புதிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புக்கான அரசு பொதுத் தேர்வுகளில், தமிழ் பாடத்தில் முதல் மதிப்பெண் பெறுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு இந்தக் கழகம் தங்கப் பதக்கத்தை, இந்த ஆண்டு முதல் வழங்கி வருகின்றது.

தனது உபரி நிதியிலிருந்து, பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்களைக் கட்டித் தரும், மாபெரும் சமுதாயப் பணியையும் இந்த

நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்தக் கழகத்தின் உபரி நிதியிலிருந்து, இதுவரை 4.28 கோடி ரூபாய் செலவில் 282 பள்ளிக் கட்டடங்கள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக் காலத்தில் மட்டும், இதுவரை 2 கோடி ரூபாய் செலவில் 122 பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என்பது எண்ணி மகிழத் தக்க ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

இன்று இந்தக் கழகத்தால், 100 கோடி ரூபாய் மதிப்பில், மேற்கொள்ளப்பட உள்ள புதிய திட்டங்களை முறைப்படி தொடங்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தக் கல்வி ஆண்டு முதல், பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில், ' 80 சதவீதத்திற்கும் அதிக மதிப்பெண்களைப் பெறும், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, கல்வி ஊக்கத் தொகையாக 3,000 ரூபாய் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப் படும் என்பதை அறிவிப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அதே போல, பிளஸ் 2 தேர்வில், அதாவது மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில், 80 சதவிகிதத்திற்கும் அதிகமான மதிப்பெண்களை பெறுகின்ற, கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, 5,000 ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படும். மேலும் பிளஸ் 2 தேர்வில் மாநிலத்தின் முதல் 5 இடங்களைப் பெறுகின்ற, கழகப் பணியாளர்களின் குழந்தைகளின் மேல் படிப்பிற்கு ஆகின்ற செலவு முழுவதையும், இந்தக் கழகமே ஏற்றுக்கொள்ளும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த, 13 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய அறக்கட்டளை விரைவில் ஏற்படுத்தப்படும் என்பதை, மிக்க மிகழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரின் மருத்துவச் செலவிற்காக, ஒரு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ நிதியுதவி வழங்கும் புதிய திட்டம் ஒன்று விரைவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசு ஆணைகள், விரைவில் வழங்கப் படும்.

பாடநூல் கழகத்தின் வெள்ளி விழாவினையொட்டி, தமிழ்நாட்டிலுள்ள அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய பள்ளிக் கட்டடங்களைக் கட்டித்தருவதற்கு தமிழக அரசு ஒரு கோடி ரூபாய் நிதியை, கழகத்திற்கு நன்கொடையாக அளிக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.. இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப் படும் புதிய கட்டடங்கள் "வெள்ளி விழாக் கட்டடங்கள்" என்று அழைக்கப்படும்.

தமிழ்நாட்டில் இக்கழகத்தின் வட்டார அலுவலகங்கள் . 4 மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே எஞ்சியுள்ள தென் ஆர்க்காடு வள்ளலார், திருவண்ணாமலை சம்புவராயர், இராமநாதபுரம் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும், புதிய வட்டார அலுவலகங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தப்படும் என்பதை மிக்க

## ஈரோட்டுச் சந்தை

பெரியார் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 5 இலட்சம் விசைத்தறிகளும், 50 ஆயிரம் கைத்தறிகளும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஈரோடெக்ஸ், அண்ணா சென்டெக்ஸ், சென்குமார் டெக்ஸ் இப்படி ஏராளமான கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

சென்னிமலையில் சனல் துணிகள் நெய்வது தொடர்பான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் அடைந்துள்ளன. ஈரோட்டில் நடக்கும் (செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில்) சந்தைகளில் பள்ளிபாளையம், குமாரபாளையத்திலிருந்து வரும் லுங்கிகள், திருப்பூரிலிருந்து வரும் பனியன்கள், எடப் பாடியிலிருந்து வரும் துண்டுகள், மல்லசமுத்திரம், ஆட்டையாம்பட்டி, திருச்செங்கோடு முதலிய இடங்களிலிருந்து வரும் முறுக்குத்துண்டுகள், போன்றவை ஈரோட்டுச் சந்தைகளில் இடம் பெறுகின்றன.

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டத் தலைநகரங்களில் எல்லாப் பாடநூல்களும் ஒரே இடத்தில் கிடைப்பதற்காக, கழகத்தின் சார்பில் "சிறப்பு விற்பனை நிலையங்கள்" 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் மாபெரும் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பணியாளர்கள் அனைவருக்கும் இந்த வெள்ளி விழா ஆண்டில், எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்தக் கழகத்தின் செயல்பாடுகள் சிறப்படைய, நீங்கள் அனைவரும் இலட்சிய உணர்வுடன் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கழகம் இந்திய துணைக் கண்டத்தின் மற்ற பாடநூல் நிறுவனங்களுக்கு எல்லாம், என்றென்றும் ஒரு முன்னோடியாகத் திகழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

மேலும் கல்லூரிகளில் தமிழ் மீடியம் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு தான் தமிழில் பாடநூல்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வந்தன. கடந்த 25 ஆண்டுகளாக இந்த தமிழ் மீடியத்தில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கான Text Books தமிழில் அச்சிடப்படவில்லை. இனிமேல் கல்லூரிகளில் தமிழ் மீடியம் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இந்தப் பாட நூல் கழகம் தமிழிலேயே பாடநூல்களை அச்சிட்டு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை மிகவும் சிறப்பான முறையில் நிறைவேற்றுவதோடு, இந்த விழாவினைச் சீரோடும், சிறப்போடும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்த தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், அருமை சகோதரர் திரு எப்.எம். ராஜரத்தினம் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தென் இந்திய சர்க்கரை ஆலைகள் சங்க (தமிழ்நாடு) வெள்ளி விழாவினை சென்னை தாஜ் கோரமண்டல் ஓட்டலில் குத்து விளக்கை ஏற்றி தொடங்கி வைத்தார். தென்இந்திய சர்க்கரை ஆலைகள் சங்க (தமிழ்நாடு) தலைவர் திருமதி ராஜ்ஸ்ரீபதி உடனிருக்கிறார். (4.3.96)***






மஞ்சள் நிறம் ஒரு புனித மான, மங்களகரமான நிறமாகத் தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்படுகிறது. மக்கள் கொண்டாடும் விழாக்கள், மற்றும் திருமணங்களில் மஞ்சள் இன்றியமையா இடத்தை வகிக் கிறது. 'மஞ்சள் மகிமை' என்றும், 'பொன்னிறப் புதையல்' என்றும் அழைக்கும் சிறப்புப் பெற்று உள்ளது.

**மஞ்சளின் பயன்**

இந்தியா, மத்தியக் கிழக்கு மற்றும் தூரக்கிழக்கு நாடுகளில் சைவ, அசைவ உணவுகளில் வாசனைப் பொருளாகவும், நிறமியாகவும் பயன்படுகிறது. அழகுச்சாதனப் பொருள் களிலும், மருந்துப் பொருள் களிலும் மஞ்சள் பயன்படுத்தப் படுகிறது.

**மஞ்சள் விளையும் மாநிலம்**

உலக அளவில் இந்தியா 80 சதவிகித அளவுக்கு மஞ்சள் உற்பத்தி செய்துவருகிறது. இந்தியாவில் ஆந்திரா, மகா ராஷ்டிரா, ஒரிஸ்ஸா, தமிழ்நாடு, கேரளா, அஸ்ஸாம், மேற்கு வங்கம், திரிபுரா மற்றும் கர்நாடகம் போன்ற மாநிலங் களில் மஞ்சள் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

**முதலிடம் வகிக்கும் பெரியார்**

தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 21 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யப்படு கிறது. பெரியார் மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 10 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் பயிரிடப் படுகிறது. தமிழ்நாட்டில் 37,900 டன் மஞ்சள் உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் சாகு படி செய்தாலும், பெரியார்



மாவட்டம் முதலிடத்தையும், கோயம்புத்தூர் இரண்டாவது இடத்தையும், சேலம் மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன.

மேற்காசிய நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஜப்பான், போன்ற நாடுகளுக்கு இந்தியா பெருமளவில் மஞ்சள் ஏற்றுமதி செய்து வருகிறது. அந்நாடுகளில் இந்திய மஞ்சளுக்குத் தனி மதிப்பு இருக்கிறது. அதேநேரத்தில் வியட்நாம், தாய்லாந்து, சீனா போன்ற மஞ்சள் பயிரிடும் நாடுகளின் கடும் போட்டியையும் இந்தியா எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையும் உள்ளது.



### தேவையோ மிக அதிகம்

ஜெனிவா நாட்டிலுள்ள உலக வர்த்தக மையம் மஞ்சளின் தேவை ஆண்டுக்கு ஆண்டு உயர்வதாக மதிப்பிட்டுள்ளது. அதன் கணிப்பின்படி கி.பி. 2000 ஆண்டில் மஞ்சளின் உலகத் தேவை மிக அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மஞ்சளை இறக்குமதி செய்யும் நாடுகளின் தர நிர்ணயித்திற்கேற்றபடி நல்ல தரமான மஞ்சளை உற்பத்தி செய்யவும், நியாயமான விலையை நிர்ணயம் செய்யவும் வேண்டும். இதனால் விவசாயிகளுக்கு நல்ல வருமானமும், நாட்டுக்கு அந்நியச் செலாவணியும் கிடைக்கும்.

பெரியார் மாவட்டத்தில், கோபிசெட்டிப்பாளையம், சத்திய மங்கலம், ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி போன்ற இடங்களில் மஞ்சள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஏக்கருக்கு 25 முதல் 30 குவிண்டால் வரை அறுவடை செய்யப்படுகிறது.



### ஈரோட்டு விரலி

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் கிட்டத்தட்ட 50 வகையான மஞ்சள் பயிர் செய்யப்படுகின்றன. பெரும்பாலும் அவை பயிரிடப்படும் இடம் அல்லது ஊரின் பெயரையே கொண்டுள்ளன. சான்றாக ஈரோடு விரலி, கரூர் மஞ்சள், சின்ன சேலம் மஞ்சள் போன்றவை தமிழ்நாட்டிலும், ஆலப்பி, டுக்கிராலா, அமலாபுரம், மைசூர் போன்ற வகைகள் இதர மாநிலங்களிலும் பயிரிடப்பட்டு வருகின்றன.

### புத்தம்புது வகைகள்

தற்போது, வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் புதுப்புது வகையான உயர் விளைச்சல் மஞ்சள் ரகங்கள் உருவாக்



கப்பட்டு விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள கோ1, பி.எஸ்.ஆர்1, பி.எஸ்.ஆர்2 போன்றவையும், சுகுணா, சுதர்சனா, சுகந்தம், ரோமா, சுரோமா ' என்ற மஞ்சள் வகைகளும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் நல்ல தரம், நல்ல மகசூலும் கிடைக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மஞ்சள் விளைவிக்கும் மண்வளம்**

பெரியார் மாவட்டத்தில் நிலவும் தட்பவெட்ப நிலையும் வளமான மண்வளமும் மஞ்சள் சாகுபடிக்கு உகந்ததாக இருக்கிறது. ஆண்டுக்கு 10 முதல் 11 மாதம் வரை தண்ணீர் தேவையான அளவுக்கு கிடைக்கிறது. மேலும் பெரியார் மாவட்டத்தில் உள்ள காளிங்கராயன் வாய்க்காலில் ஆண்டு முழுதும் ஓடும் தண்ணீர் மஞ்சள் சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது.

> உண்மையான மகிழ்ச்சி நாம் எவ்வளவு பொருள் ஈட்டுகிறோம் என்பதால் இல்லை. அது மற்றவர்களுக்கு எவ்வளவு உபயோகப்படுகிறது என்பதில் தான் இருக்கிறது.
>
> —ரவீந்தரநாத் தாகூர்

**மஞ்சள் மண்டி**

ஈரோட்டிலுள்ள மஞ்சள் சந்தை மிகவும் சிறப்பு வாய்ந்தது. கிட்டத்தட்ட 100 மண்டிகளைக் கொண்டு ஆயிரக்கணக்கான வணிகர்களைப் பெற்றுள்ளது. ஆண்டுக்கு ஏறக்குறைய 600 கோடி ரூபாய் அளவுக்கு வணிகம் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஏற்றுமதி**

மஞ்சளிலிருந்து ஓலியோ ரெசின் எனப்படும் வாசனைக் குழம்பு தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது அமெரிக்காவில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. மஞ்சளிலிருந்து பெறப்படும் 'குர்குமின்' சாயத்தொழிலுக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. இப்பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பெரியார் மாவட்டத்தில் நிறையவுள்ளன.

தமிழ்நாட்டிலேயே மஞ்சள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் பெரியார் மாவட்டத்தில், உயர் விளைச்சல் பயிர்வகைகளை விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்துவதன் மூலம் இந்தியாவிலேயே மஞ்சள் உற்பத்தியில் முதலிடத்தைப் பெறமுடியும் என்ற நன்னம்பிக்கையை நாம் சந்தித்த மஞ்சள் பயிர்ச் சாகுபடியாளர்கள் தெரிவித்தார்கள்.



—எம்.வி.எம். அசோகன்

## Universal Fertiliser Corporation

Mfrs. of: UNIVERSAL MIXTURES & SPECIAL MIXTURES

**அமோக விளைச்சலுக்கு யுனிவர்சல் உரங்கள் & பூச்சி மருந்துகள்**

தயாரிப்பாளர்கள்

### யுனிவர்சல் பெர்டிலைசர் கார்பரேசன்

52, மொடச்சூர் ரோடு, கோபிசெட்டிபாளையம் - 638 476

போன்: 22135, 22735

### யுனிவர்சல் பெஸ்டிஸைட்ஸ் & கெமிக்கல் இண்டஸ்ட்ரி

86, பாரதி பார்க் ரோடு, எண் 2, சாயிபாபா மிஸ்ஸன் அஞ்சல்

கோயம்புத்தூர் - 641 011

தமிழகத்திலேயே உரம் மற்றும் பூச்சி மருந்துகளை அதிக அளவில் விற்பனை செய்துவரும் ஒரே நிறுவனம்

Branches: 10, Annamalai Chettiar Road, Saibaba Colony, Coimbatore-641011 Ph: 440368, 440878

★ Gobi ★ Erode ★ Sathy ★ Thalavadi ★ Dharapuram ★ Mathampatti ★ Udumalpet ★ Ooty ★ Salem



போன்: 216226
223423

## நெ.1 லாரி புக்கிங் ஆபீஸ்

544, சத்திரோடு, ஈரோடு-3

தினசரி ரெகுலர் சர்வீஸ் திண்டுக்கல், மதுரை, திருச்சி, கோவை & பாலக்காடு

மற்றும்

### ஆப்பக்கூடல் சக்தி சுகர்ஸ் லிமிடெட்டின்

போக்குவரத்து ஒப்பந்ததாரர்கள்

16, சத்தி ரோடு, ஈரோடு

போன்: 223313

துவக்கம்: 1912

போன்: கோபி - 22317
கவுந்தப்பாடி - 40359

# கோபிசெட்டிபாளையம் கூட்டுறவு நகர வங்கி லிட். நெ.979,

**தலைமையகம் : கோபிசெட்டிபாளையம் - 638 476**

**கிளை அலுவலகம்: கவுந்தப்பாடி - 638 455**

31.10.95ல் வங்கியின் நிதி நிலைமை (ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | : | 50.00 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | : | 39.44 |
| நடைமுறை மூலதனம் | : | 1672.31 |
| வைப்புகள் | : | 1565.84 |
| கடன் நிலுவை | : | 1141.12 |
| நிகர லாபம் 94-95 | : | 12.94 |

## வங்கியின் சிறப்பு அம்சங்கள்

நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளைவிட வைப்புகளுக்கு கூடுதல் வட்டி அளிக்கப்படுகிறது.
ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்றது.

வங்கியின் அடமானக் கடன், ஜாமீன் கடன், நகைக்கடன், சிறுவாகன போக்குவரத்துக் கடன், காசுக் கடன், மற்றும் அனைத்து முன்னுரிமைக் கடன், நலிவுற்றோர் கடன்களும் வழங்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் மாநில வரைவோலைத் திட்டத்தின் கீழ் குறைந்த கமிஷனில் வரைவோலை வழங்கப்பட்டு வருகிறது.

உறுப்பினர்களுக்கு கடந்த பல ஆண்டுகளாக அதிகபட்ச பங்கு ஈவு வழங்கி வருகிறது.

பாதுகாப்பு பெட்டக வசதி உள்ள வங்கி.

பெரியார் மாவட்டத்திலேயே முதலாவது நகரக் கூட்டுறவு வங்கி

**பி.எம். சாயிநாதன்,** பி.எஸ்சி.,
செயலாளர்,

**நா. நடராஜன்,** டி.ஆர்.எஸ்.எச்.டி.சி
தனி அலுவலர்



# சீரோடு வளர்ந்து வரும் ஈரோடு

ஈரோடு நகராட்சி 1871-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாள் சிறப்புநிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி 8.44 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். 1991ஆம் ஆண்டின் மக்கட்தொகை 1,59,232 ஆகும். 1994-ஆம் ஆண்டு 17.3.94ன்படி இடைக்கால மக்கட்தொகை 1,65,600 ஆகும். நகராட்சி எல்லைக்குள் மேல்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் நகராட்சியால் பராமரிக்கப் பட்டு வருகிறது. நான்கு தாய் சேய் நல விடுதிகள் பராமரிக்கப் பட்டு வருகின்றன.

ஈரோடு நகராட்சியில் 100 ஏக்கர் பரப்பளவில் 75 பேருந்துகள் நிறுத்தும் அளவுக்கு முதல்நிலைப் பேருந்து நிலையம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் வ.உ.சி. பூங்கா மற்றும் பெரியார் நகர்ப் பூங்கா ஆகிய இரு பூங்காக்கள் மக்களின் பொழுதுபோக்குக்காக இந் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நகராட்சியில் இரண்டு தினசரி காய்கறி அங்காடிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**குடிநீர் வழங்கல்**

காவிரி நதியில் இருந்து அதாவது வைராபாளையம் என்ற இடத்தில் தலைமை நீரேற்று நிலையம் அமைக்கப் பட்டு, தினமும் 1.65 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப் படுகிறது. தினசரி நபர் ஒன்றுக்கு 86 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. நகரில் 300 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. 450 பொது குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. நகரில் குடிசைப் பகுதிகளில் மின் மோட்டார் பொருத்திய ஆழ் துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்து குடிநீர்தேக்கத் தொட்டி மூலம் நல்லமுறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**சாலைப்பணிகள்**

நகராட்சியால் அதன் எல்லைக்குள் 94.813 கிலோ மீட்டர் சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன,

**தெருவிளக்கு**

இந்நகராட்சியால், தெருக் களில் சோடியம் ஆவி விளக்குகள் 239, மெர்க்குரி ஆவி விளக்குகள் 589, குழல் விளக்குகள் 2,281 ஆக மொத்தம் 3,109 விளக்குகள் பொருத்தப் பட்டு நல்ல நிலையில் பராமரிக் கப்பட்டு வருகிறது.

**பொதுக் கழிப்பிடம்**

நகரின் வியாபாரம் மிகுந்த பகுதிகளிலும் பேருந்து

நிலையத்திலும் 6 கட்டணக் கழிப்பிடங்களும் 29 நவீனக் கழிப்பிடங்களும் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஈரோடு நகராட்சியில் 1994-95-ஆம் ஆண்டில் உலக வங்கி திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட பணிகள் :

ஆர்.கே.வி. சாலையில் நேதாஜி வணிக மையம் ரூ.76 இலட்சம் செலவிலும், சிதம்பரான் குட்டை அங்காடி வளாகத்தில் கடைகள் ரூ. 10.70 இலட்சம் செலவிலும், காமராஜர் சாலையில் வணிக மையம் ரூ.18 இலட்சம் செலவிலும், மத்தியப் பேருந்து நிலையத்தில் நகரப் பேருந்து பயணியர் நிழற்குடை ரூ.8 இலட்சம் செலவிலும், சுடுகாட்டில் அபிவிருத்தி பணிகள் ரூ.9 இலட்சம் செலவிலும், நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளுக்குப் பராமரிப்பு பணிகள் ரூ.50 இலட்சம் செலவிலும், கழிவுநீர்ப் பண்ணை மற்றும் உரக் கிடங்கில் வளர்ச்சிப் பணிகள் ரூ.10 இலட்சம் செலவிலும், குடிநீர் வழங்கும் பணிகள் ரூ.28.50 இலட்சம் செலவிலும், தெரு விளக்குகள் ரூ.10.75 இலட்சம் செலவிலும் ஆக கூடுதலாக ரூ.229.95 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஈரோடு நகராட்சியில் 1995-96-ஆம் ஆண்டில் உலக வங்கி திட்டத்தின் கீழ் செய்ய உள்ள பணிகள் :

மத்தியப் பேருந்து நிலையத்தில் முதல்மாடி கட்ட ரூ.46 இலட்சமும், வீரபத்திர சாலையில் கடைகள் கட்ட ரூ.21 இலட்சமும்,

## ஈரோடு நகராட்சி: ஒரு கண்ணோட்டம்

[illegible] பூராந்தகன் திருமண [illegible]
949. கொக்கம்பாளையம் [illegible] சுருகாட்டு [illegible].
1079 திருவறைக் கொண்றம் தாரி எரி வெட்டுதல்
1204. சிவாலயத்திற்கு ஆவனி [illegible] தாக்கு [illegible] [illegible]
1265. காலிங்கராயன் கால்வாய் வெட்டு [illegible]
1275. பெருமாள் கோயிலுக்குச் சேரர் மானியம்.
1340. சிவாலயத்திற்கு நிலம் மானியம்.
1420. பெருமாள் கோயிலில் ஸ்ரீ பாத மண்டபம் கட்டப்பட்டது.
1502. சிவாலயத்திற்கு பசலை மானியம்.
1527. இரு கோயில்கட்கும் [illegible] மானியம்.
1568. கமல புஷ்கரணி குளம் வெட்டுதல்.
1628. சந்திரமதி முதலியார்மடம் ஏற்பட்டது.
1630. கஸ்தூரிரங்க நரசராஜ கோயில் திருப்பணி.
1640. திருமலை நாயக்கரும் கோட்டை புதுப்பித்தது.
1643. முத்துவீரப்ப நாயக்கன் சத்திரம் [[illegible]] [illegible].
1656 மூக்கறுப்புப் போர் நடந்தது.
1672. மைசூர் x மதுரை நாயக்கர் போர்.
1779. ஸ்வார்ட்ஸ் பாதிரியார் வந்தது.
1790. மெடோஸ் ஈரோட்டைக் கைப்பற்றுதல்.
1791. ஈரோடு கம்பெனியார் வசம் ஆதல்.
1799. கம்பெனி ஆட்சி ஏற்படல். தலைநகர் [illegible]
1804. மாவட்டத் தலைமை பவானியிருந்து [illegible] [illegible].
1805. தீரன் சின்னமலையை தூக்கிலிடல்.
1815 கொங்களம்மன் கோயில் திருப்பணி.
1819. பருத்தி முதலில் பயிரிடுதல்.
[illegible] லண்டன் மிஷன் பணி தொடங்கியது.
[illegible] ஈரோடு தாலுகா தலைநகர் ஏற்பட்டது.
1862 சிறைசாலை ஏற்பட்டது.
1871 நகராட்சி ஏற்பட்டது.
1871 முதல் மக்கள் கணக்கெடுப்பு (10.201)
1876 தாது. தொடர்ந்து பஞ்சம்.
1878 பஞ்ச நிவாரணப் பணிகள். ஈரோடு கோட்டை இடிப்பு.
1882 காவிரியில் மிகப் பெரிய வெள்ளம்.
1891 ஜெர்மானியர் ஹீச கல்வெட்டுப்படி எடுத்தல்.
1893 வாகீச பக்த சமாஜம் ஏற்படுத்தியது. (அப்பர் சுவாமிகள் மடம்)
1910 இரண்டாம் முறை கல்வெட்டுப்படி எடுத்தல்.
1917 [சி.எஸ்.ஐ] கோஷா ஆஸ்பத்திரி தோற்றம்
1918 நீராவி எந்திரம் மூலம் தண்ணீர் விநியோகம்.
1923 கட்டாயக் கல்வி முதலில் அமுல்
1926 ஈ.வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் அரங்கநகர் [illegible]
1930 இசைக்காகத் தமிழகத்திலேயே முதல் மாநாடு.
1934 முதல் ஆணையர் நியமனம்.
1936 மின்சார எந்திரம் மூலம் நீர் விநியோகம்.
1939 நகராட்சி மூன்றாம் நிலையானது.
1940 நகராட்சி இரண்டாம் நிலையானது.
1945 வீதிகளுக்கு மின்சாரம்.
1949 ஈரோடு முதல் நிலை ஆனது.
1972 நகராட்சி தேர்வு நிலை ஆனது.
1979 பெரியார் மாவட்டம் உதயம்.
1981 நகராட்சி சிறப்பு நிலை ஆனது.

நேதாஜி சாலை பழ அங்காடி முதல் மாடியில் கடைகள் கட்ட ரூ.16 இலட்சமும், காமராஜர் சாலை வணிக மையம் முதல் மாடி கட்ட ரூ.20 இலட்சமும், பொது சுகாதாரப் பணிகளுக்கான லாரிகள் வாங்க ரூ.10 இலட்சமும், சாக்கடை மற்றும் சாலை அபிவிருத்திப் பணிக்காக ரூ.70 இலட்சமும், தெரு விளக்குகள் அமைக்க ரூ.55 இலட்சமும், மழைநீர் புதைச் சாக்கடை கட்ட ரூ.240 இலட்சமும் ஆகக் கூடுதலாக ரூ.478 இலட்சம் உலக வங்கித் திட்டத்தின் கீழ் - மேற்கண்ட பணிகள் 1995-96-ஆம் ஆண்டில் செய்யப்படவுள்ளன.

**ஈரோடு நகராட்சியில் காவிரி நதிக்கரையோரம் தூய்மைப்படுத்தும் திட்டம்**

குறைந்த செலவில் பொதுக்கழிப்பிட வசதித் திட்டம் ரூ.20 இலட்சமும், நதிக் கரையோரம் அபிவிருத்தி திட்டம் ரூ.12 இலட்சமும், சுடுகாடு மேம்பாட்டுத் திட்டம் 6 இலட்சமும் ஆகக் கூடுதலாக ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில், காவிரி நதிக் கரையோரம் தூய்மைப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளன.



# "இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட அனைவருக்கும் முன்னோடி வீரன் அழகு முத்துக்கோன்"

## –மாண்புமிகு முதல்வர் பெருமிதம்

**15.3.1996 அன்று நடைபெற்ற வீரன் அழகு முத்துக்கோன் திருவுருவச் சிலை திறப்பு விழா மற்றும் வீரன் அழகு முத்துக்கோன் போக்குவரத்துக் கழகத் தொடக்க விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**

ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீர உணர்வுடன் போராடித் தனது இன்னுயிரைத் தியாகம் செய்த, வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலையை இங்கே திறந்து வைத்து, அவரது திருப்பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகத்தையும் துவக்கி வைத்து, உங்கள் அனைவரையும் இந்தச் சரித்திரச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியில் ஒன்றாகக் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

பாரத நாடு, சிறப்பான ஒரு பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் உலகுக்கு அளித்த தொன்மையான சரித்திரம் படைத்த ஒரு நாடு. அதிலும், கல் தோன்றி மண் தோன்றா காலத்தே, முன் தோன்றிய மூத்த பெருங்குடியான, தமிழ்க்குடி மக்கள் வாழ்ந்த செந்தமிழ் நாடு. வீரம் விளைந்திட்ட நாடு. விவேகம் வளர்ந்திட்ட பூமி என்பதில் ஐயமில்லை.

அயலாரின் ஆதிக்கத்திற்கும் மக்களை

மதிக்காத ஏகாதிபத்திய உணர்வுக்கும், எதிர்ப்புத் தெரிவித்து, விடுதலை உணர்வு பொங்க, தங்களது இன்னுயிரை ஈந்தவர்கள் தமிழகத்தின் சரித்திரத்தில் ஏராளம் உள்ளனர். ஆனால், சரித்திரத்தின் பக்கங்களில், அவர்களின் வீரத்திற்கும், தியாகத்திற்கும் உகந்த ஒரு இடம் கிடைக்காமல் போனதும் உண்டு. சரித்திரத்தில் தகுந்த இடம் மறுக்கப்பட்டவர்களும் உண்டு. இவ்வாறு வரலாற்றில் இருட்டடிப்புச் செய்யப்பட்ட வீரகுலத் தோன்றல்களை, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி, வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து பெருமைப்படுத்துவதிலும், அவர்தம் புகழை நிலை நிறுத்தச் செய்வதிலும், ஒரு தனி ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

எங்கள் அரசைப் பொறுத்த வரையில், மக்களின் ஆத்மார்ந்த உணர்வுகளை மதித்து, அதற்கு வடிவம் கொடுப்பதையே, தனது அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகக் கருதி செயல்பட்டு வருகின்றது. அந்த உணர்வுகளின் உந்துதலால்தான், நாட்டுப் பற்றுடன் பாடுபட்ட நல்லவர்கள், வல்லவர்கள், வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோரின் நினைவாகத் திருவுருவச் சிலைகளையும், நினைவகங்களையும், நாங்கள் நிறுவி வருகின்றோம்.

தங்களது இனத்திற்குச் சிறப்புச் சேர்த்த தலைவர் என்று பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கருதுகின்ற, மாசற்ற தலைவர்களின் பெயர்களில் மாவட்டங்களையும், போக்குவரத்துக் கழகங்களையும் அமைத்து வருகின்றோம். இந்த ஐந்தாண்டு கால நல்லாட்சி, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்கும் நல்லதொரு ஆட்சி என்பதை இத்தகைய நிகழ்ச்சிகள் நாட்டிற்கு உணர்த்தும் என்று உறுதியாக நம்புகிறேன்.

பாரத நாட்டில் நிலவிய ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி, நம்மை அடிமைப்படுத்த நினைத்த ஆங்கிலேயரின் எதேச்சதிகாரத்திற்கும், ஆதிக்க உணர்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்



**★எல்லாப் புத்தகங்களையும் விட, சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தை விட, உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.**

என்று, இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே கொதித்து எழுந்தவர்களில் முதன்மையானவர், மாவீரன் அழகு முத்துக்கோன். வாணிபம் செய்ய வந்த ஒரு நிறுவனமான கிழக்கிந்திய கம்பெனி, நாடு பிடிக்கும் நயவஞ்சக வேலையில் ஈடுபட்ட போது, ஆங்கிலேயர்களின் அடக்குதலுக்கும் ஒடுக்குதலுக்கும் சற்றும் அஞ்சாமல் அவர்களது ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி வெள்ளையரின் ஆதிக்க வெறி பிடித்த பீரங்கிக்குத் தன்மானமிக்க தனது இன்னுயிரைக் காணிக்கையாக ஈந்த ஒரு மாவீரன்தான், இந்த அழகு முத்துக்கோன்.

மதுரை முத்துகிருஷ்ணப்ப நாயக்கரின் திசை காவல் தளபதிகளில் ஒருவராக நெல்லைச் சீமையில், கரிசல் காட்டுப் பகுதியில் உள்ள காட்டாளங்குளத்தில் கோட்டை ஒன்றை அமைத்துத் தனது துணைவியார், அன்னபூரணி நாச்சியார் என்பவருடன் ஆட்சி செய்து வந்தவர் அழகு முத்துக்கோன் ஆவார். அவரது வரலாற்றையும் வீரத்தையும் காட்டாளங்குளம், பெத்தநாயக்கனூர் மற்றும் நடுக்காட்டூர் ஆகிய பகுதிகளில் கிடைக்கப் பெற்ற வரலாற்றுச் சுவடுகளின் மூலம், நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

இன்றும் இப்பகுதியில் வீரன் அழகு முத்துக்கோன் பரம்பரையில் வந்தவர்களை "அரண்மனைச் சாமிகள்" என்று அழைக்கும் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. ஆக, கோட்டை அமைத்து அதில் அரண்மனையையும் அமைத்து வெள்ளையர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய காரணத்தினால்தான் அந்த மாவீரனின் வழி வந்தவர்கள், "அரண்மனைச்சாமிகள்" என்று அழைக்கப்படுகின்றார்கள் என்றே பொருள் கொள்ள வேண்டி உள்ளது.

பெத்தநாயக்கனூர் அரண்மனையில்,

வீரன் அழகு முத்துக்கோன் முகாமிட்டிருந்த போது, கிழக்கிந்திய கம்பெனியின் Agent, Khan Sahib என்பவர் ஆங்கிலேயர்களின் படையுடன் சென்று, வஞ்சகமாக முற்றுகையிட்டான். ஆங்கிலேயருக்கு அடி பணியாமல் 247 வீரர்கள் மட்டுமே கொண்ட தனது சிறிய படையுடன், வீரன் அழகு முத்துக்கோன் எதிர்த்து நின்று வீரத்துடன் போர் புரிந்துள்ளார்.

இந்தப் போரின் இறுதியில், வீரன் அழகு முத்துக்கோன், ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டுப் பெத்தநாயக்கனூர் கோட்டைக்கு, 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நடுக்காட்டூர் சீமைக்கு, கொண்டு செல்லப்பட்டுள்ளார். தனது இன்னுயிரா அல்லது தாய்த் திருநாட்டின் தன்மானமா என்று ஆங்கிலேயர் விலை பேசிய போது, தாய்த் திருநாட்டின் தன்மானம்தான் பெரியது என்று முழங்கி, பணிந்து பதவி ஏற்று. வாழ்வதை விட, வீர மரணம் அடைவதே மாவீரனுக்கு அழகு என்பதை, உலகுக்கு நிரூபித்துக் காட்டி ஆங்கிலேயர்களின் இரக்கமற்ற பீரங்கி குண்டுகளுக்கு, தனது இன்னுயிரை ஈந்தார் அந்தத் தியாகச் செம்மல். வளர்ந்து வரும் தங்கள் ஆதிக்கத்திற்கு எங்கே வீரன் அழகு முத்துக்கோன் முற்றுப்புள்ளி வைத்து விடுவாரோ, என்று பயந்துதான் ஆங்கிலேயர்கள் நடுக்காட்டூர் சீமையில் அவரது துணைத் தளபதிகள் 6 பேரோடு சேர்த்து, வீரன் அழகு முத்துக்கோனைக் கட்டி வைத்துச் சுட்டுக் கொன்று விட்டார்கள்.

வீரன் அழகு முத்துக்கோன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு, கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்பாக, ஆங்கிலேயர் களின் ஆதிக்கத்தையும் ஏகாதிபத்தியத் தையும் எதிர்த்து இந்திய சுதந்திரத்திற்காகப் போராடி உயிர் நீத்த தன்னலமற்ற ஒரு தியாகி.

அந்த வகையில், இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்கள், வீராங்கனைகள், தியாகிகள் அனைவருக்கும் உணர்ச்சி பூர்வமான ஒரு முன்னோடியாக வீரன் அழகு முத்துக்கோன் இருந்துள்ளார் என்றால், அதுமிகையாகாது. சென்னையில், மிக முக்கியமான பகுதியான எழும்பூரில் கம்பீரமாக எழுந்தருளியிருக்கும், வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலையும், புதுக்கோட்டை மாவட்டத்தில் வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின், திருப்பெயரைத் தாங்கி உலா வரும் பேருந்துகளும், வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் புகழையும், பெயரையும் என்றென்றும் மக்கள் மனதில், நிலை பெறச் செய்யும் என்பது உறுதி.

நாட்டின் தன்மானம் காக்க, தங்கள் உயிரைத் தியாகம் செய்த, நமது முன்னோர்களின் வரலாறு, இன்றைய தலைமுறையினருக்கும், நமது எதிர்காலச் சந்ததியினருக்கும், ஒரு வாழ்க்கைப் பாடமாக, சமுதாயப் படிப்பினையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இளைய தலைமுறையினர் இடையே நாட்டுப் பற்றை வளர்ப்பதற்கும் நன்னெறிகளைப் பரப்பவும் தியாக உணர்வை மேம்படுத்தவும், இத்தகைய சரித்திர நாயகர்களின் வாழ்க்கை வரலாறு, ஒரு தூண்டுகோலாக, கலங்கரை விளக்கமாக, விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில், சாதனைப் படைத்த ஒரு சரித்திர நாயகனின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்து, மக்கள் மனதில் அவரது பெயர். என்றென்றும் நிலைத்திருக்க வழி வகுத்துள்ளதை எண்ணி நான் மனநிறைவு அடைகின்றேன்.

புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும், வீரன் அழகு முத்துக்கோன் போக்குவரத்துக் கழகம்,

---

**கடமையைச் செய்யாமலே உரிமையைத் தேடினால், அது கானல் நீராகிவிடும்!**

**—அண்ணல் காந்தியடிகள்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள எல்லா பகுதிகளுக்கும், பேருந்துகளை இயக்கும். இந்தப் புதிய போக்குவரத்துக் கழகத்தில், முதல் கட்டமாக **315** பேருந்துகள் இயக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப்போக்குவரத்துக் கழகம் சீரிய முறையில் மக்கள் பணி ஆற்ற எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட ஜாதியினருக்கோ அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கோ என்று இல்லாமல் அனைத்துத் தரப்பு மக்களின் உள்ள உணர்வுகளைப் புரிந்து, அவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து, வாழ்ந்து மறைந்த மாபெரும் தலைவர்களை இந்த அரசு கௌரவப் படுத்தி, சரித்திரத்தில் அவர்களது சாதனைகளுக்கும் தியாகங்களுக்கும் உரிய இடத்தைப் பெற்றுத் தந்து கொண்டிருக்கிறது.

திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் இருந்த வீட்டை, நினைவகமாக ஆக்கினோம். கவியரசு கண்ணதாசனுக்குக் காரைக்குடியில் மணிமண்டபம் அமைத்தோம். சென்னையில் அவருக்குத் திருவுருவச் சிலை வைத்தோம். டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையைச் சென்னையில் நிறுவியதோடு 5 கோடி ரூபாய் செலவில் வேறு எந்த மாநிலமும், செய்ய முன் வராத ஒரு முயற்சியாக மணிமண்டபம் ஒன்றை அமைத்து வருகின்றோம்.

தீரன் சின்னமலைக் கவுண்டர் பெயரில் மாவட்டம் ஒன்றை அமைத்தோம். விரைவில் அந்த பெருமகனாரின் திருவுருவச் சிலை சென்னையில் திறந்து வைக்கப்பட உள்ளது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரில் போக்குவரத்துக் கழகம் ஒன்றை நிறுவ உள்ளோம். வீரன் சுந்தரலிங்கம் பெயரில், ஒரு போக்குவரத்துக் கழகம் இன்னும் ஒரு சில நாட்களில் துவக்கப்பட உள்ளது. சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெருமகனாரின் திருவுருவச் சிலையை நானே திறந்து வைத்தேன்.

திரு ஏ.டி. பன்னீர் செல்வம், திரு செண்பக ராமன், தமிழ்த்தென்றல் திரு.வி.க., தியாகி சங்கரலிங்கம் ஆகியோருக்கும் திருவுருவச் சிலைகள் விரைவில் சென்னையில் நிறுவப்பட உள்ளன. திரு கக்கன் அவர்களின் திருவுருவச் சிலை மதுரையில் நிறுவப்பட உள்ளது.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்க என்றென்றும் முன்னணியில் இருக்கும் என்று உறுதி அளிக்கின்றேன்.

தமிழ்ப் பண்பாடு மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த யாதவா இன மக்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் வசித்து வருகின்றார்கள். தமிழக பொருளாதார, சமூக வளர்ச்சியில், அவர்களது பங்கை, நிச்சயமாக எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. காலங் காலமாக தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் இப்பிரிவு மக்கள், சீரிய முறையில் பங்கு கொண்டு வருகிறார்கள்.

இந்திய சுதந்திர வரலாற்றில் ஆரம்ப கால கட்டத்திலேயே மற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் ஒரு முன்னோடியாக விளங்கிய தங்களது குலத்தோன்றல் வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் புகழுக்கு, சிறப்புச் சேர்க்கப்படவில்லையே என்ற ஆதங்கம் அவர்கள் மனதில், நீண்ட நாட்களாக இருந்து வந்ததை நான் அறிவேன். அந்த மக்களின் ஆதங்கமும், மனக்குறையும், இன்று நீங்கி விட்டது என்பதை அறியும் போது உள்ளபடியே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்கே பேசிய திரு வே. கலைமணி அவர்கள் வீரன் அழகு முத்துக்கோன் அவர்கள், புகழுடன் வாழ்ந்திட்ட காட்டாளங்குளக் கோட்டையைச் சீரமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை என் முன் வைத்தார்கள். வீரன் அழகு முத்துக்கோன்

வாழ்ந்த கோட்டை தமிழக அரசின் சார்பில், புனரமைத்துப் புதுப்பிக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன். அதுமட்டுமின்றி வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தக் கோட்டையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் சுற்றுலாத் தலமாக அமைக்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன்தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், யாதவ குல மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையும் என் முன் வைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் தற்போது செயல்பட்டு வருவதால், உடனே எந்த அறிவிப்பையும் என்னால் வெளியிட முடியவில்லை. இருப்பினும் அந்த ஆணையத்திற்கு இந்தக் கோரிக்கை அனுப்பி வைக்கப்படும் என்பதையும், உங்களது இந்தக் கோரிக் கையை நாங்கள் கனிவுடன் பரிசீலனை செய்வோம் என்பதையும் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாதவ இன மக்கள் தங்கள் பொருளாதார சமூக வாழ்க்கையில் மேம்பாடு அடைந்து எல்லா மக்களுடனும் தொடர்ந்து அமைதியாக, இணங்கி வாழவேண்டும் என்பதே எனது பேரவா. அனைத்துத் தரப்பு மக்களும் ஒன்றுபட்டு எந்தப் பாகுபாடும் இல்லாமல் ஒரு தாய் வயிற்று மக்களாக இணங்கி வாழ எங்கள் அரசு எல்லா வளர்ச்சித் திட்டங்களையும், ஒரு புதிய முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது என்பதையும் தொடர்ந்து செயல்படுத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில் பங்கு கொண்ட நீங்கள் அனைவரும், எல்லா வளமும் எல்லா நலமும் பெற்று வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு விடைபெறுகிறேன்.




**சென்னை, சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற ஆஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான உலகக் கோப்பை கால் இறுதி கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் சிறந்த ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆஸ்திரேலிய அணியைச் சார்ந்த வீரர் திரு. மார்க் வாக்கிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பரிசு வழங்கினார். (11.3.96)**



# ஜீவா போக்குவரத்துக் கழகம்

கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் சேரன் போக்குவரத்துக் கழகம் 1.3.1972 அன்று தொடங்கப்பட்டு, கோவையைத் தலைநகரமாகக் கொண்டு, செயல்பட்டு வந்தது. பின்னர், கோவை மாவட்டத்திலிருந்து 17.9.79 அன்று பெரியார் மாவட்டம் பிரிந்து தனி மாவட்டமாகச் செயல்படத் தொடங்கியது. பின்பு, பெரியார் மாவட்ட மக்களுக்குக் கூடுதலான போக்குவரத்து வசதி அளிக்கும் பொருட்டு சேரன் போக்கு வரத்துக் கழகத்திலிருந்து, ஜீவா போக்குவரத்துக் கழகம் 1.4.83 அன்று பிரிந்தது. அது ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

முதன் முதலில் 10 கிளைகளைக் கொண்டு 4 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்ட போக்குவரத்துக் கழகம் தற்போது 19 கிளைகளையும், கிட்டத்தட்ட 840 பேருந்து களையும், கொண்டு திறம்படச் செயலாற்றி வருகிறது.

இப்போக்குவரத்துக் கழகம் தொடங்கும் போது 2,247 தொழிலாளர்கள் மட்டுமே இருந்து வந்தார்கள். தற்போது கிட்டத்தட்ட 3 மடங்கு அளவுக்குத் தொழிலாளர்கள் அதிகரிக்கப் பட்டுள்ளார்கள். 639 கிராமங்களுக்குப் புதியதாகப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி, 4.69 இலட்சம் மக்களுக்குப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தியுள்ளது. இக்கழகம் ஆரம்பித்த புதிதில் 1.10 இலட்சம் கி.மீட்டர்கள் மட்டுமே தினமும் பேருந்துகள் ஓடிவந்தன. தற்போது இது 3.40 இலட்சம் கி.மீ. அளவுக்கு அதிகரித்து, கிட்டத்தட்ட 9.25 இலட்சம் பயணிகள் இதனால் தினமும் பயனடைகிறார்கள்.

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக் கெடுப்பின்படி 1000 மக்கள் தொகைக்குக் குறையாத கிராமங்கள் 317 என்று கண்டறியப் பட்டன. இவற்றுள் 315 கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டு விட்டது என்பது மகிழ்ச்சிகரமான செய்தி. மீதமுள்ள

இரண்டு கிராமங்களுக்கும் சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்பு உடனடியாகப் பேருந்துகள் விடப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறைந்த எண்ணெயில் அதிக தூரம் பேருந்துகளை இயக்கியதற்காகப் புதுடில்லியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பு (1993-94 ஆண்டுக்கான) சிறப்புப் பரிசை ஜீவா போக்குவரத்துக் கழகம் பெற்றிருக் கிறது.

விழாக்களின் போது சிறப்புப் பேருந்துகளை இரவு பகலாக - பழனி, பண்ணாரி, பவானி, பாரியூர், கொடுமுடி, பகவான் கோயில், தம்பிக்காளை, ஐயன் கோயில், சுள்ளிக்கரடு, சென்னிமலை, சிவன்மலை, அப்பாச்சிமார் மடம் போன்ற ஊர்களுக்கு இயக்கியுள்ளது. 1994-95-ஆம் ஆண்டுகளில் ஜீவா போக்குவரத்துக் கழகம் 108.39 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டி யுள்ளது.

## தொழிலாளர் நலத் திட்டங்கள்

அனைத்துக் கிளைகளிலும் தொழிலாளர் களுக்கு ஓய்வு அறை வசதி ரூ.31 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் கூட்டுறவு சிக்கனக் கடன் வங்கி மூலம் இதுவரை 4,122 தொழிலாளர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டு, சுலபத்தவணை முறையில் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இறுதி வகுப்புகளில் (+2 வகுப்பில்) 75 சதவிகிதத்துக்கு மேல் மதிப் பெண்கள் பெற்று முதல் மூன்று நிலைகள் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தலா ரூ.1,500, ரூ.1,000, ரூ.500 என மூன்று பரிசுகள் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தொழில் பயிற்சிப் பள்ளி (ஐடிஐ) ரூ.14 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 1989-90-ஆம் ஆண்டு முதல் பயிற்சி அளித்து வருகின்றது. இதுவரை 95 தொழிலாளர்களின் குழந்தைகள் பயிற்சி பெற்றுள்ளனர். போக்குவரத்துக் கழகங்களால் தொடங்கப்பட்ட பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இதுவரை இக்கழகத்தைச் சார்ந்த 39 தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பொறியியல் கல்லூரியிலும் 11 தொழிலாளர் களின் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரியிலும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 16 தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு நுழைவுத் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் தொடங்கப் பட்டு, இரண்டு இடங்களில் 262 வீடுகள் ரூ.205.88 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, தொழிலாளர் களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மூன்றாவது வீடுகட்டும் திட்டப்பணிகள் தொடங்கப்படவுள்ளன. மற்றும் அனைத்துப் போக்குவரத்துக் கழகங் களிலும் உள்ள பொதுவான நலத்திட்டங்கள் இக்கழகத்தின் தொழிலாளர்களுக்கும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்று ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் பொது மேலாளர் திரு கே. ஜெகந்நாதன் தெரிவித்துள்ளார்.



இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய வரப்பிரசாதம்

சமையல் செய்வது இனி எளிது! இனிது!

# சக்தி மசாலாப் பொடிகள்

மசாலாவை வியர்வை சிந்த ஆட்டி அரைக்கும் தொல்லை இனி இல்லை. சக்தி மசாலாப் பொடிகள் வீட்டு சமையலை எளிதாக்கி அறுசுவை நறுமணம் கமழச் செய்கிறது. நாவிற்குச் சுவையான நறுமண மசாலாக்கள்! சக்தி மசாலா லட்சோபலட்சம் இல்லத் தலைவிகளால் தினந்தோறும் சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இப்பொழுது உங்கள் இல்லங்களை நாடி வருகிறது. நம்பகமான தரம்! சுவை! நியாய விலை! ஒவ்வொரு முறை நீங்கள் சக்தி மசாலா பாக்கெட்டுகளை வாங்கும் போதும் இந்த உண்மையை உணர்வீர்கள். இது உங்களின் அனுபவ ரீதியான உண்மை! வெறும் தற்புகழ்ச்சியில்லை!

| | | | |
|---|---|---|---|
| மஞ்சள் தூள் | மிளகாய்த் தூள் | மல்லித் தூள் | சுக்கு மல்லி காபி |
| மிளகுத் தூள் | சாம்பார் பொடி | கறிமசால் பொடி | வற்றல் வடாகம் |
| ரசப் பொடி | இட்லிப் பொடி | பருப்புப் பொடி | சக்தி அப்பளம் |
| பூண்டுப் பொடி | புளியோதரை | பிரியாணி மசாலா | மீன் குருமா மசாலா |
| சிக்கன் மசாலா | மீன் வறுவல் மசாலா | புளிக்குழம்பு பொடி | கரம் மசாலா |
| சில்லி சிக்கன் மசாலா | | | |

தமிழகமெங்கும் லட்சோப லட்சம் இல்லத்தரசிகளின் பேராதரவை பெற்று விளங்குகிறது. மூன்றுமுறை தமிழ்நாடு அரசின் சிறுதொழில் விருதினைப் பெற்றுள்ள ஒரே மசாலா நிறுவனம். 1992 ஆம் ஆண்டு இந்திய அளவிலான ஜம்னாலால் பஜாஜ் விருதும் பெற்றுள்ளது.

தயாரிப்பாளர்

**சக்தி டிரேடிங் கம்பெனி**

6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004

போன்: 0424 - 533601 to 533606, Fax: 533607

1987, 1988, 1990 தமிழ்நாடு அரசின்
சிறு தொழில் விருது

பஜாஜ் விருது 1992

National Award for Quality Products - 1994

WITH BEST

COMPLIMENTS

FROM





# Shri Kannan

# Departmental Stores

13, Annaji Street, ERODE - 638 001

Phone : 214167

*With Best Compliments From*

Off: 60244
Phone: 60844
Mill: 60403

**SRI ANGALAPARAMESWARI TEXTILE MILLS PRIVATE LIMITED**

83, SIVANATHAPURAM,

VELLAKOVIL - 638 111

TAMIL NADU

**S. Krishnan**
Managing Director

*With best compliments from*

Res : 20055
Phone: Off : 20023
Fty : 87 - 244

**SURIYA PERUNDURAI FOOD PRODUCT (P) LTD.,**

**FACTORY:**
832/4-A, Chennimalai Road,
Ingoor.

**Office:**
36, Bhavani Road
Perundurai - 638 052
Periyar District

**P. NALLASAMY**
*Managing Director*

STD : 04251
Res : 60381
Phone: Off : 60382
Mill : 60591

*With Best Compliments From*

**SHREE RATHINAHIRI ESWARAR SPINNING MILL PRIVATE LIMITED**

**OFFICE:**
307, Muthur Road
Vellakovil - 638 111

**MILL:**
SF No.681, Coimbatore Road
Vellakovil - 638 111

**V.B. GANESAN**
Managing Director

**காமராஜர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. E.H. 125**

**Kamarajar Weaver's Co-operative Production & Sale Society Limited, No. E.H.125**

DHODDAMPALAYAM, BHAVANISAGAR - 638 451
PERIYAR DISTRICT

**எங்களிடம் புத்தம் புதிய நவீன டிசைன்களில் சீகோ சேலைகள், பட்டுசேலைகள் மற்றும் கேரளா சேலைகள் கிடைக்கும்**

P. சேரலாதன்
மேலாளர்,

V.R. பெரியசாமி
தனி அலுவலர்/கைத்தறி அலுவலர்
E-H, 125, காமராஜர், W.C.S.,
தொட்டம்பாளையம் & P.O.,
பவானிசாகர் (Via), சத்தி (T.K.)
பெரியார் மாவட்டம்

# "ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக ஒற்றுமை உணர்வுடன் வாழ்வீர்!"

## இராஜபாளையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேண்டுகோள்

கடந்த சில நாட்களாக, காமராஜர் மாவட்டத்தில் நடைபெற்று வந்த சில விரும்பத்தகாத சம்பவங்களைத் தொடர்ந்து, அந்த இடத்தில் பொது அமைதியைக் காக்க அனைத்துத் தரப்பு மக்களும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக ஒற்றுமை உணர்வுடன் அப்பகுதி வாழ் மக்கள் வாழ்கின்ற நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கிட வேண்டும் என்றும், சமுதாயத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பொது நலம் காக்க விழைவோர் அனைவருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந் தார்கள்.

10.3.1996 அன்று காலை 11.00 மணி அளவில் சென்னையிலிருந்து விமானம் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மதுரை புறப்பட்டுச் சென்றார். அங்கு விமான நிலையத்தில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். அய்யர் மற்றும் மதுரை நகர காவல் துறை ஆணையாளர் திரு வெங்கடகிருஷ்ணன், உள்துறைச் செயலாளர் திரு ஆர். வரதராஜுலு மற்றும் உயர் அதிகாரிகளுடன் மதுரை மாவட்டத்தின் நிலைமைகளைக் கேட்டறிந்தார்கள். மேலும், மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்கள். போக்குவரத்து பாதிக்கப்படாமலும், அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படாமலும் இருக்க தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் விமானம் மூலம் புறப்பட்டு, இராஜபாளையம் (PACR) பாலிடெக்னிக் விளையாட்டு மைதானத்தில் வந்து இறங்கினார்.

முன்னதாக, அங்கு வந்து இருந்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இணைச் செயலாளர் திரு எஸ். ஆதிசேஷய்யா, காமராஜர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வி. கனகராஜ் மற்றும் அரசு அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

பின்னர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இராஜபாளையத்தில் சமீபத்தில் துப்பாக்கி சூடு நடைபெற்ற இரண்டு பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவுப் பொட்டலங்களை வழங்க ஆணையிட்டார். மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனது ஆறுதலைக் கூறினார். ஆரம்பத்தில் கூட்டம் ஏதும் இன்றி இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்துள்ளார்கள் என்று தெரிந்ததும், தைரியமாக மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியே வர ஆரம்பித்தார்கள். எல்லா இடங்களிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து தங்கள்

## பெரியார் மாவட்ட நதிகள்

பெரியார் மாவட்டத்தில் பாயும் முக்கிய நதி காவிரி. இது மாவட்டத்தின் கிழக்குப் பகுதியின் எல்லைப் புறத்தே ஓடுகிறது. பவானி, நொய்யல், அமராவதி, சித்தாறு, குரங்கன் போன்ற ஆறுகள் பெரியார் மாவட்டத்தில் காவிரியுடன் கலக்கின்றன. பவானி ஆற்றுடன் பாய்கரை, கல்லாறு, மோயாறு போன்றவை கலக்கின்றன. காஞ்சி, நீலிப்பள்ளம், நள்ளாறு ஆகியவை நொய்யலுடன் சேரும் சிற்றாறுகளாகும். அமராவதிக்கு உப்பாறும், குவனாறும் சிற்றாறுகளாகும். பெரியார் மாவட்டத்தில் பெரும்பாலும், எல்லா ஆறுகளும், கிழக்கு நோக்கியே ஓடுகின்றன.

**பெரியார் மாவட்டத்தில் வனவளம்**

தமிழ்நாட்டில் உள்ள வனக் கோட்டங்களில் பெரியார் மாவட்டத்திலுள்ள வனக் கோட்டமே மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது. பெரியார் மாவட்ட வனக்கோட்டம் 4 சரகங்களைக் கொண்டது. தமிழ்நாட்டில் கிடைக்கும் சந்தன மரங்களில், மூன்றில் ஒரு பகுதி பெரியார் மாவட்டத்தில் கிடைக்கிறது. சத்தியமங்கலத்தில் தமிழ்நாடு அரசு சந்தனமரக் கிடங்கு ஒன்றும் உள்ளது.

கருத்துக்களைக் கூற மக்கள் கூட்டம் வெள்ளமாகக் கூடி விட்டது. பல இடங்களில் மக்கள் கூட்டத்தைப் பார்த்து தனது காரை நிறுத்தி, கீழே இறங்கி அவர்களுடன் பேசினார்கள். அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் மாவட்ட நிர்வாகம் மூலம் செய்து தரப் படும் என்றும் தெரிவித்தார்.

அங்கிருந்து புறப்பட்டு, மங்காபுரம் பகுதிக்குச் சென்று, அங்கு விரும்பத்தகாத சம்பவங் களில் தீக்கிரையான சில வீடுகளையும், இதர பகுதி களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பார்வையிட்டார். அப்பகுதி வாழ் மக்களை நேரில் சந்தித்து, அவர்களிடம் அந்தச் சம்பவம் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தவறு செய்தவர்கள் மீதும், தேவையற்ற முறையில் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தவர்கள் மீதும், பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அப்பகுதியில் தொடர்ந்து அமைதியை நிலைநாட்ட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தங்களது முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

காவல்துறை முழுமையாக முடுக்கி விடப்பட்டு, பல்வேறு பகுதிகளிலிருந்து, பாதுகாப்புப் பணிக்கு வந்திருக்கிறது என்றும், எனவே எது குறித்தும் பயப்பட வேண்டாம் என்றும், எல்லா பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்பட்டு, ஒரு சமூகமான சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்றும் உறுதி கூறினார்கள். குறிப்பாக எல்லா இடங்களிலும், தாய்மார்களும், பெண்களும் பெரும் திரளாக வந்து நின்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தங்களது குறை களைக் கூறி முறையிட்டு, இந்த அசம்பாவிதங்கள் நடை பெறாமல் தடுக்கவும், தங்களுக்குப் பூரண பாதுகாப்பை மாண்புமிகு முதலமைச்சர் தான் அளிக்க முடியும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் தான் அமைதி திரும்பும் என்றும் தெரிவித்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்கப்படும் என்றும், அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார். அதற்கு அப்பகுதிவாழ் மக்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

பின்னர் முடங்கியார் சாலைக்குச் சென்றார். அங்கு பல இடங்களில் தனது காரை நிறுத்தி, கீழே இறங்கி வந்து, பெருமளவில் குழுமியிருந்த அப் பகுதிவாழ் மக்களைச்சந்தித்து, அவர்களது கருத்துக்களையும், குறைகளையும் கேட்டறிந்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்களும், நிவாரண உதவிகளும் உடனடியாக வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த இடத்திலேயே ஆணையிட்டார்.

மங்காபுரம் பகுதியில் ஒவ்

வொரு தெருவாக உள்ளே நுழைந்து, காரை விட்டு இறங்கி, அந்தப் பகுதி மக்களைச் சந்தித்து, அவர்களது குறை களைக் கேட்டறிந்தார். அவர் களைப் பாதுகாக்கத் தேவை யான நடவடிக்கைகளை மேற் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டார்.

திருவனந்தபுரம் சாலையில் கூடியிருந்த மக்களைச் சந்தித்த போது, அவர்கள் தங்களது பகுதிக்குக் குடிநீர் வசதியும், மின்சாரம் வழங்குவதில் உள்ள குறைபாட்டையும் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்த இடத்திலேயே அலுவலர் களை அழைத்து, அவர்களது குறைகளைப் போக்க நடவடிக் கைகளை மேற்கொள்ள ஆணை பிறப்பித்தார்.

பின்னர் முகவூர் சென்று அப்பகுதி வாழ் மக்களையும் சந்தித்துப் பேசினார்கள். அதன் பின்னர், முத்துசாமிபுரத்திற்குச் சென்று எல்லா இனமக்களையும் அவர்கள் வாழ்கின்ற பகுதிக்கே நேரில் சென்று பார்த்து, அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்தார். அவர்களுக்கும், உணவுப் பொட்டலங்களும், சேலை, வேட்டி அரிசி போன்ற நிவாரண உதவிகளும் உடனடி யாக வழங்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கினார். விரும்பத்தகாத சம்பவங்களில் மரணம் அடைந்த 10 பேரின் குடும்பங்களைச் சந்தித்து, தனது ஆழ்ந்த இரங் கலையும், ஆறுதலையும் நேரில் தெரிவித்து அரசு சார்பில் 50,000 ரூபாய் நிவாரண உதவித் தொகையை வழங்கினார்.

பின்னர் சேத்தூர் பகுதிக்குச் சென்று அங்கு எல்லா தரப்பு மக்களையும் நேரில் கண்டு அவர்களது கருத்துக்களையும் கேட்டறிந்தார். அங்கும் மக்களின் குறைகளைத் தீர்க்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை யிட்டார்.

இவ்வாறு பிற்பகல் ஒரு மணி முதல் கிட்டத்தட்ட 3 மணி நேரம், அதாவது 4 மணி வரை பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட பின்பு, விருந் தினர் மாளிகைக்கு திரும்பி வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாக இராஜ பாளையம் பகுதியைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்கள் கூட்டத்தை தலைமையேற்று நடத்தினார். 15 அரசியல் கட்சி மற்றும் சமூக நல அமைப்புகளின் சார்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தவர் களின் பட்டியல் இத்துடன் தனியே இணைக்கப்பட்டுள்ளது.

---

**த**ன்னம்பிக்கை மிக்கவர்கள் ரோஜாவையே பார்ப்பார்கள். தன்னம்பிக்கை அற்றவர்கள் அதில் உள்ள முட்களையே பார்ப்பார்கள்.

**—கலில் கிப்ரான்**

---

ஒன்றரை மணி நேரம் நடை பெற்ற இந்தக் கூட்டத்தில் அனைவருடைய கருத்துக் களையும் கேட்டறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இராஜபாளையம் பகுதியில், பாதுகாப்புப் பணிகள் முடுக்கி விடுவதற்கும், சகஜ வாழ்க் கைக்கு அனைத்து நடவடிக்கை களையும் மேற்கொள்ளப்படும் என்றும், அனைத்து இன மக்களும் சகோதர மனப்பான்மையுடன் ஒன்றுபட்டு, ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், காவல் துறைத் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், திரு ஆர். வரத ராஜுலு, மற்றும் இணைச் செயலாளர் திரு எஸ். ஆதி சேஷய்யா ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தின் இறுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட ஆணை களை வழங்கினார்கள்.

1. பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களுக்கு உடனடியாக மாவட்ட நிர்வாகம் உணவுப் பொட்டலங்களையும், சேலை, வேட்டி, அரிசி போன்ற நிவாரண உதவிகளையும், வீடு எரிந்து போனவர்களுக்கு நிவாரண உதவித் தொகையையும் வழங்க வேண்டும்.

2. கடந்த சில நாட்களில் ஏற்பட்ட விரும்பத்தகாத சம்ப வங்களில் மரணம் அடைந்த வர்களின் குடும்பங்களுக்கு ஏற்கெனவே 50,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை அறிவிக்கப்பட்டு, 10 பேரின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டதைப் போலவே

இந்த நிகழ்ச்சியில் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருபவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கி ஆணையிட்டுள்ளார். பலத்த காயம் அடைந்தவர்களுக்கு 5,000 ரூபாயும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு 2,500 ரூபாயும் நிவாரண உதவித் தொகையாக, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும்.

3. பாதிக்கப்பட்ட பகுதியில் பொது மக்கள் கேட்டுக் கொண்டதை அடுத்து, அத்தகைய பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர் வசதி செய்து தர வேண்டும் என ஆணையிட்டுள்ளார். அவசியப்படும் இடங்களில் லாரிகள் மூலமாக குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய ஆணையிட்டுள்ளார்.

4. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் மாண்புமிகு முதலமைச்சரிடம் பிளஸ் 2 படிக்கும் அப்பகுதி வாழ் பள்ளி மாணவ, மாணவியர்கள் இந்த சம்பவங்களினால் தங்களது தேர்வுகளை எழுத இயலாமல் போய்விட்டது என்று முறையிட்டவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்குத் தீர்வு காணப்படும் என்றும், விரைவில் ஒரு மாற்று ஏற்பாடு செய்து, அவர்கள் மீண்டும் தேர்வு எழுத ஏற்பாடு செய்யப்படும் என்றும், அவர்களது எதிர்காலம் பாதிக்காமல் இருக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

5. சகஜ வாழ்க்கை உடன் திரும்ப 11.3.1996 அன்று முதல் அரசு பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் எல்லா தடங்களிலும் இயக்கப்படும் என்றும், அதற்கு காவலர்களின் துணையுடன் பேருந்துகளை இயக்கவும், நெடுஞ்சாலை பாதுகாப்பிற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யவும் ஆணையிட்டுள்ளார்.

**புகழ், பாராட்டு வரும் போது தகுதி தெரியாமல் சிலர் மிகப்பெரிய தவறுக்கு ஆளாகி விடுகிறார்கள் அதுதான் தவறு.**

**–டாக்டர் எம்.ஜி.ஆர்.**

6. இராஜபாளையத்தில் திரு பி.ஆர்.ராமசுப்பிரமணிய ராஜா அவர்களின் தலைமையில் ஒரு அமைதிக் குழு (Peace Committee) ஏற்படுத்தி அதில் எல்லா தரப்பு மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து, உடன் இந்தக் கூட்டத்தைக் கூட்டி அமைதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவும் ஆணையிட்டுள்ளார்.

7. சமீப காலமாக, இந்த மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள செயற்கையான பதட்டங்களுக்குக் காரணமாகவும், பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிக்கும் செயலுக்குத் துணையாக இருந்த, சமூக விரோத சக்திகளின் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

8. முத்துசாமிபுரத்தைச் சேர்ந்த 4 ஆதிதிராவிட மக்கள் கொல்லப்பட்டது தொடர்பான வழக்கை காவல்துறையின் மாநிலக் குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு (CB-CID) உடனடியாக மாற்றம் செய்து ஆணையிட்டுள்ளார். மேலும் இந்த வழக்கில் துரிதமாக விசாரணை மேற்கொள்ள குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் எனவும் ஆணை பிறப்பித்துள்ளார்.

9. சகஜ வாழ்க்கை திரும்புவதற்கும், கடைகளை உடனடியாகத் திறந்து வைக்கவும், தேவையானப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளவும், பாதுகாப்புகளை அளிக்க வேண்டும் என்று காவல் துறையினருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

10. இந்த விரும்பத்தகாத சம்பவங்களின்போது பலரது கடைகளும், சிறிய நிறுவனங்களும் தாக்கப்பட்டு பொருளாதார சேதம் ஏற்பட்டதாகத் தெரிவித்ததன் பேரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்த பொருளாதர நஷ்டத்தை உடனடியாக ஆய்வு செய்து அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டுள்ளார். தேவையான நஷ்டஈடு வழங்குவது குறித்து விரைவில் முடிவு எடுத்து ஆணைபிறப்பிக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 50 கிலோ மீட்டர் தூரம் வரை காரில் சாலை வழியே பயணம் செய்து, எல்லா இடங்களையும் நேரில் பார்வையிட்டு பொது மக்களை நேரில் சந்தித்

தார். கிட்டத்தட்ட 40-க்கும் மேற்பட்ட இடங்களில் காரிலிருந்து இறங்கி, திரள்திரளாகக் குழுமியிருந்த மக்களைச் சந்தித்து குறை கேட்டார். அவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்க ஆணையிட்டுள்ளார். பொதுமக்களிடமிருந்து மனுக்களையும் பெற்றார். ஆதி திராவிடர்களின் குடியிருப்புகளுக்குச் சென்று, காரிலிருந்து இறங்கி, அப்பகுதிக்கு நடந்து சென்று பார்வையிட்டார். மரணமடைந்தவர்களின் குடும்பத்தார்கள் அனைவருக்கும் தலா 50,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை வழங்கி ஆறுதல் கூறினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பின்னர் மதுரைக்கு வந்து, அங்கிருந்து விமானம் மூலம் புறப்பட்டு மாலை 7.30 மணிக்கு சென்னை வந்தடைந்தார்.

இராஜபாளையத்தில் கூட்டப்பட்ட 15 அரசியல் கட்சிகளின் சார்பில் கலந்து கொண்டவர்களின் பட்டியல்:

1. திரு ஏ.பி. முத்துகிருஷ்ணம் ராஜா, அஇஅதிமுக

2. திரு ஏ. நாகரத்தினம் ஜனதா தளம்

3. திரு வி. ரவி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

4. திரு ராமகிருஷ்ணன் பாரதீய ஜனதா கட்சி

5. திரு பி.எம். ராமசாமி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

6. திரு ராஜூ தேவர் பார்வர்டு பிளாக்

7. திரு அனந்த கிருஷ்ணன் காங்கிரஸ்

8. திரு கே.ஆர். பாலா ஆர்.எஸ்.எஸ்.

9. திரு வி. ராஜேந்திரன் காங்கிரஸ் (வாழப்பாடி)

10. திரு எஸ். பாக்கியராஜ் செயலர், தேவேந்திர குலம்

11. திரு கே. ராமன், (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) காங்கிரஸ்

12. திரு ஐ. பால்ராஜ் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

13. திரு ரூஸோ திராவிட முன்னேற்றக் கழகம்

14. திரு பி. கோவிந்தராஜா தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

15. திரு எஸ். செல்வகுமார் எம்.ஜி.ஆர். அதிமுக

# ஈரோட்டுச் செல்வந்தருக்கு பாரதியார் எழுதிய கடிதம்



மகாகவி பாரதியார் தனது கடைசிக் காலத்தில், பெரியார் மாவட்டத்திலுள்ள கருங்கல் பாளையம்என்னும் ஊரில் தங்கபெருமாள் நூலக விழாவில் 'மனிதனுக்கு மரணமில்லை', 'இந்தியாவின் எதிர் காலம்' ஆகிய இரண்டு தலைப்புகளில் உரைநிகழ்த்தியுள்ளார். மகாகவி தனது படைப்புக்களை வெளியிடுவதற்காக ஈரோட்டிலுள்ள செல்வந்தர்களிடம் நிதியுதவி கோரி எழுதிய கடிதமே பாரதியாரின் கடைசிக் கடிதமாகும் என்று திரு ஆ.வே. ஜீவானந்தம் என்பார் தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அலுவலகம்: **21388, 20455**
போன்:
வீடு : **20588**

எங்கள் நல்வாழ்த்துக்கள்

# சத்தியமங்கலம் தாலுகா
# பஸ் உரிமையாளர்கள் சங்கம்

6/59-F மைசூர் டிரங்க் ரோடு,

ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம்

**S.K. PONNUSAMY**
President



சேவைக்கு உகந்த வங்கி — சேமிப்புக்கு சிறந்த வங்கி

# பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., ஈரோடு.

**பொதுமக்கள் தங்களது சேமிப்புத் தொகைகளை சிறந்த முறையில் இலாபகரமான முதலீடு செய்ய கீழ்க்காணும் வைப்புத் திட்டங்கள் மற்றும் கடன் வசதிகளையும் அமல்படுத்தியுள்ளோம்.**

மாதச் சம்பளம் பெறுவோர் மகிழ்வுடன் சேமிக்க
**"சிறப்பு ரெக்கரிங் டிபாசிட் திட்டம்"**

கூட்டு வட்டியில் கூடுதல் பயன் பெற
**"ஜெ.ஜெ. பொற்குவியல் டிபாசிட் திட்டம்"**

மாதம் ஒருமுறை வட்டி பெற
**"நிரந்தர வைப்புத் திட்டம்"**

சிறுகச் சிறுக சேமிக்க
**"சேமிப்புக் கணக்குத் திட்டம்"**

அனைத்து வகை டிபாசிட்டுகளுக்கும் தேசியமயமாக்கப்பட்ட, வணிக வங்கிகளைவிட
**1/2 சதவிகிதம் கூடுதல் வட்டி**

**ரூ.118 கோடி டெபாசிட் நிலுவையுள்ள பெரிய வங்கி, குறைந்த வட்டியில் ரூ.40,000 வரை நகைக்கடன், வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டத்தில் உள்ள 29 கிளைகளில் உங்களுக்கேற்ற டிபாசிட் மற்றும் கடன் திட்டங்களில் சேர்ந்து பயன்பெற வேண்டுகிறோம்.**

**என். பரமசிவம், எம்.கோப். எச்.டி.சி.**
இணைப்பதிவாளர் / மேலாண் இயக்குநர்
(முழு கூடுதல் பொறுப்பு)

THE P.D.C.O BANK LIMITED ERODE

குறைந்த வாடகையில் **"பாதுகாப்புப் பெட்டக"** வசதி.
வைப்புகளுக்கு ரூ.1,00,000 வரை
**இன்சூரன்ஸ் பாதுகாப்பு**

**கடன் வசதிகள்**

சிறுதொழில் திட்டத்தின் கீழ் புதிய சிறு தொழில்கள் தொடங்க ரூ.10.00 இலட்சம் வரை குறைந்த வட்டியில் கடன் வசதி

சிறுசாலைப் போக்குவரத்து வாகனங்கள் வாங்க ரூ.10.00 இலட்சம் வரை கடன் வசதி (லாரி, டெம்போ, டாக்ஸி, பஸ், ஆட்டோ)

மருத்துவமனை கட்டத் தகுதியுடைய மருத்துவர்களுக்கு ரூ.10.00 இலட்சம் வரை கடன் வசதி.

தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி, இருசக்கர வாகனம் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்க ரூ.30,000 வரை கடன் வசதி.

**ஆர்.என். கிட்டுசாமி**
தலைவர்



# பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டம்

**ந**ம் நாட்டில், குறிப்பாகக் கிராமங்கள், சுற்றுப்புறம் தூய்மையாக இருப்பதில்லை. அசுத்தமான சுற்றுப்புறமே காலரா, டைபாயிட், சீதபேதி, மலேரியா, யானைக்கால் போன்ற பல தொத்து நோய்கள் பரவக் காரணமாக உள்ளது. இவ்வாறு பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக நாம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாகப் பேண வேண்டும்.

சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க மத்திய ஊரக சுகாதாரத் திட்டம் என்ற திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தின் முன்னோடித் திட்டமாக- "தீவிர சுகாதாரத் திட்டம்" என்ற பெயரில் கிராமப் பகுதிகளில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார் வீடுகளில், குறைந்த செலவிலான கழிப்பிடங்களை அரசு மானியத்துடன் கட்டிக் கொள்வதற்கு இத்திட்டம் வழிவகை செய்துள்ளது.

தீவிர சுகாதாரத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பிடங்கள் கட்டுவதன் மூலம் கிராமங்களில் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்கலாம். இதன் காரணமாக நோய் பரவாமல் கட்டுப்படுத்தலாம்.

பெரியார் மாவட்டத்தில் 1989-ஆம் ஆண்டு முதல் தீவிர சுகாதாரத் திட்டத்தின் மூலம், கிராமப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்காக அவரவர்கள் வீடுகளிலேயே மலிவு விலை நீரடைப்புள்ள உறிஞ்சுக் குழி கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இக்கழிப்பிடங்களை அமைக்க தற்பொழுது மொத்தம் ரூ.2,399 செலவு ஆகும்.

இச்செலவில் ரூபாய் 460-ஐ மட்டுமே சம்பந்தப்பட்ட வீட்டின் உரிமையாளர் ஏற்றுக் கொண்டால் போதுமானது. எஞ்சிய செலவுத் தொகை ரூ.1,840ஐ மத்திய, மாநில அரசுகளும், யுனிசெப் நிறுவனமும் மானியமாக வழங்குகின்றது.

இவ்வகைக் கழிப்பறைகளில் நாற்றம் ஏற்படாது, மலம் வெளியில் தெரியாது, ஈக்கள் மற்றும் கொசுக்கள் உற்பத்தியாகாது, சுத்தம்செய்ய ஆட்கள் தேவையில்லை, இடவசதியும் அதிகம் தேவையில்லை, மழைக் காலத்திலும் சுத்தமாக இருக்கும்; மலம் கழித்த பின்னர் சுத்தம் செய்யக் குறைந்த அளவு தண்ணீரே போதுமானது.

இம்மாவட்டத்தில் நாளதுவரை 43,125 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே அரசுத்துறை மூலம் தனியார் வீடுகளில் அதிக எண்ணிக்கைக் கழிப்பிடங்கள் கட்டிய முதல் மாவட்டம் பெரியார் மாவட்டம் ஆகும். இத்திட்டம் வெற்றிகரமாகப் பெரியார் மாவட்டத்தில் நடைபெறுவதற்கு முக்கியக் காரணம் கிராம மக்களிடையே உள்ள விழிப்புணர்வு என்று கூறினால் அது மிகையாகாது.

பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டம் மற்றும் ஊரக மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுவதால், மத்திய, மாநில அரசினரால் கீழ்க்கண்ட இரு திட்டங்களும் "யுனிசெப்" உதவியுடன் இம்மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

1. சமுதாய சேவைகளின் ஒருங்கிணைப்புத் திட்டம்

2. வயிற்றுப் போக்கு நோய்த் தடுப்பு, குடிநீர் தூய்மைத் திட்டம்




தீவிர சுகாதாரத் திட்டத்தின் மூலமாக நடப்பு ஆண்டில் 5,000 கழிப்பறைகள் அமைக்கப்பட உள்ளன. கிராமப் பகுதிகளில் கழிப்பறைகள் இன்றி வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்தினர் ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகி 80 சதவிகித மானிய உதவியுடன் கழிப்பிடம் அமைத்துக் கொள்ளலாம்.

பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டம் நல்ல முறையில் செயல்படுவதன் காரணமாக, உலகக் குழந்தைகள் நிறுவனம் இம்மாவட்டத்திற்கு ஆடியோ, வீடியோ வசதியுடன் கூடிய பிரச்சார ஊர்தி ஒன்றினை வழங்கியுள்ளது. இதன் மூலம் இம்மாவட்டப் பகுதிகளில் சுகாதாரம் மற்றும் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்கள் பற்றி விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

தீவிர சுகாதாரத் திட்டத்தினைக் கண்காணித்துச் செயல்படுத்த, மாவட்ட அளவில் இணை இயக்குனர் தலைமையில், குறைந்த அளவில் பணியாளர்களைக் கொண்ட ஒரு 'சுகாதாரத் திட்டக் குழு' மாவட்ட ஆட்சியரின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகிறது.

இத்திட்டம் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களால் கிராமப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம மக்கள் தங்களது இல்லங்களில் கழிப்பிடங்கள் அமைத்துக் கொள்ளத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை ஊராட்சிய ஒன்றிய விரிவாக்க அலுவலர்கள், ஊர்நல அலுவலர்கள் வழங்கி வருகிறார்கள்.

"நமது நாட்டிலுள்ள அனைத்து ஆண்களும், பெண்களும் என்று கழிப்பிடங்களைப் பயன்படுத்துகிறார்களோ- அன்று தான் நம் நாடு முன்னேற்றம் அடைந்ததாகக் கருதுவேன்" என்று நமது மறைந்த பாரதப் பிரதமர் பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் கூறியுள்ளார். எனவே, அவரது கனவை நனவாக்க நாடும் வீடும் நலம் பெற, சுற்றுப்புறத்தைச் சுத்தமாகப் பேண, சுக வாழ்வு வாழ, அனைத்து வீடுகளிலும் கழிப்பிடம் அமைப்போம், நாட்டின் நலம் பேணுவோம்.

# திண்டல் அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில்



ஈரோடு நகருக்கு அருகே தன்னை நாடி வருவோருக்கு அருளை வற்றாது வாரி வழங்குவதாக எல்லோராலும் நம்பப்படும் அருள்மிகு திண்டல் வேலாயுதசுவாமி திருக்கோயில் பெரியார் மாவட்டத்தில் பலராலும் விரும்பப்படுகிற ஓர் முக்கிய இடமாகும்.

பெரியார் மாவட்டத்தில் புதிதாக வாகனங்கள் வாங்குபவர்கள் முதலில் ஓட்டி வந்து அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில் வாசலில் நிறுத்தி, மலைமேல் உள்ள திருமுருகன் அருளைப் பெறுகிறார்கள். இதன் காரணமாகவே இக்கோயில் முன்னால் எப்போதும் வரிசை வரிசையாகப் புத்தம்புது வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும்.

'வேலவர் சதகம்' என்ற நூலில் அருள்மிகு திண்டல் வேலாயுதசுவாமியைப் பற்றி, 100 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. புகழ்பெற்ற 18 மலைகளில் ஒன்று திண்டல் மலை என்று இக்கோயிலின் செயல் அலுவலர் திரு தனபாலன் தெரிவிக்கிறார். இக்கோயில் ஆண்டுக்கு ஆண்டு இலட்சக் கணக்கான ஆன்மீகப் பொது மக்களைத் தன்னகத்தே ஈர்த்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் தருகின்ற காணிக்கை ஒவ்வொரு ஆண்டும் பெருகி, சென்ற ஆண்டு மட்டும் சராசரியாக ரூ.3 இலட்சம் கிடைத்துள்ளது.

கோயிலின் முன் மண்டபம், கருவறை, சுற்றுப்பிரகாரம், திருமண மண்டபம், வழிபடுவோர் தங்குமிடம், மலை அடிவாரத்திலுள்ள விநாயகர் திருக்கோயில் திருப்பணி போன்ற திருப்பணிகள் இவ்வாண்டில் செய்ய முடிவு செய்திருப்பதாக இக்கோயிலின் செயல் அலுவலர் திரு தனபாலன் அவர்கள் கூறினார். மலையை ஒட்டி எந்தக் கோடையிலும் வற்றாத நீர்வளம் பெற்ற தீர்த்தக்குளம் உள்ளது. அருள்மிகு வேலாயுதசுவாமி ஈரோடு நகரில் வாழும் பொது மக்களோடு மட்டுமின்றி, கொங்கு நாட்டில் வாழும் பலரையும் ஈர்க்கின்ற ஓர் திருக்கோயிலாக அண்மைக் காலத்தில் வளர்ந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.



ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு

# 'ஆவின்'

## எங்களின் தரமான தயாரிப்புகள்

* பதப்படுத்தப்பட்ட அதிகக் கொழுப்புச் சத்துள்ள பால்.
* சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட வெண்ணெய் மற்றும் நெய்.
* சுவைமிகு பால் கோவா
* குளிர்ந்த நறுமணப் பால்
* ருசியான மசாலா மோர்
* கால்நடைகளுக்குத் தேவையான சத்துள்ள கால்நடைத் தீவனம்

**வாங்கிப் பயனடைவீர்**

டாக்டர் கே.எம். லோகநாதன்
பொது மேலாளர்

கே.கே. காளியப்பன்
தலைவர்

**பெரியார் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,**
வாசவி கல்லூரி அஞ்சல், ஈரோடு-638 316

**தொலைபேசி-533573, 533574**

ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு

*With*

*Best*

*Compliments*

*From*

# BHAVANI TALUK

# BUS OWNERS ASSOCIATION

**BHAVANI**





சென்னை தலைமைச் செயலகத்தில் குழந்தைகள் நலவாழ்வு குறித்த டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்ச திட்ட ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. (14.3.96)



# படமும் செய்தியும்



நல்வாழ்த்துக்கள்

**STANDARD AUTOMOBILES**

11--B, Kabilar Street, Gobichettipalayam-638 452, PERIYAR DISTRICT

**TVS 50 XL, சேம்ப், சூப்பர் சேம்ப், TVS SUZUKI MAX 100, MAX 100R, SAMURAI, SUZUKI SHOGUN மற்றும் TVS SCOOTY வாங்கிட கோபி, சத்தி, பவானி தாலுக்கா அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்**

**ஸ்டேண்டர்டு ஆட்டோமொபைல்ஸ்**

**11-B கபிலர் வீதி**

**கோபிசெட்டிபாளையம் - 638 452**

தொலைபேசி எண்கள்: 22728, 23655, 23755



'தமிழரசு'க்கு

எங்களது

நல்வாழ்த்துக்கள்

போன்: 23419

# இந்திரா

# தியேட்டர்

மொடச்சூர் ரோடு

கோபிசெட்டிபாளையம் - 638 476

# பெரியாரில் பெருகும் அறிவொளி



எழுத்தறிவுத் திட்டத்தில் எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டவர்கள் தொடர்ந்து படிக்கவும், தங்களது கற்கும் திறனை நிலைநிறுத்திக் கொள்ளவும் தொடர்கல்வி இயக்கம், பெரியார் மாவட்டத்தில் மே **1995** முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அறிவொளியில் படித்தவர்களுக்கு மட்டுமின்றி, மையங்களில் சேர்ந்து இடையில் நின்றுவிட்டவர்களும், இதுவரை அறிவொளி இயக்கத்தில் சேர்ந்து படிக்காதவர்களும் தொடர்கல்வி மையங்களில் சேர்ந்து படித்துப் பயன் பெறலாம்.

பெரியார் மாவட்டத்தில் மொத்தம் படிப்பறிவில்லாதவர்கள் **4,09,442** பேர் எனவும்- அறிவொளி இயக்கங்களில் சேர்ந்தவர்கள் **3,63,940** பேர் எனவும் கணக்கெடுக்கப்பட்டது.

**திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்**

மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் இம் மாபெரும் மக்கள் இயக்கத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முழுநேரப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு களப்பணியாற்றுகின்றனர். கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள கற்போர்களை அறிவொளி மையங்களில் இணைத்தல், ஏற்கெனவே அறிவொளியில் கற்றவர்களுக்குத் தொடர்கல்வி படிப்பகங்களில் கற்றுத் தருதல், தொடர்கல்விப் படிப்பகப் பொறுப்பாளர்களுக்கும் அறிவொளி ஆசிரியர்களுக்கும் தக்க ஆலோசனைகளை அவ்வப்போது வழங்குதல், பயிற்சியளித்தல் உள்ளிட்ட பணிகளை இவர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு செய்து வருகிறார்கள்.

**படிப்பகங்கள்**

மாவட்டம் முழுவதும் சுமார் 2,000 படிப்பகங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டப்பணியாக 800 படிப்பகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,200 படிப்பகங்களும் விரைவில் தொடங்கப்படும். மாவட்டத்திலுள்ள பல்வேறு





இடங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாவட்ட ஆட்சியரும் தொடர் கல்விப் படிப்பகங்களைத்திறந்து வைத்துள்ளனர். அறிவொளியில் படித்து இடையில் நின்றுவிட்டவர்களுக்கும் புதிதாகக் கற்பவர்களுக்கும் இந்தப் படிப்பகங்கள் மூலமாக மேலும் கற்பித்தல் பணி நடைபெற்று வருகிறது. ஒரு படிப்பகத்தில் 200 நூல்கள் வரை உள்ளன.

**கல்வி ஆலோசனைக் குழு**

கிராமந்தோறும் கல்வி ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்கல்வி நூலகங்களைப் பராமரித்தல், மேற்பார்வை செய்தல், மையங்களுக்கு படிக்க வரும் கற்போர்களுக்குத் தேவையான புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் செய்தல் ஆகிய பணிகளை இத்தகைய குழுவினர் செய்து வருகிறார்கள். படிப்பகங்கள் சம்பந்தமான அறிவுரைகளையும் அவ்வப்போது வழங்கி வருகின்றனர்.

**சேவை நிறுவனங்களுடன் தொடர்கல்விக்கருத்தரங்கு**

டெவலப் இந்தியா, நேரு யுவகேந்திரா, கிராம சமூக சேவா சங்கம், விவேகானந்தா, ராஜீவ் நிகேதன் போன்ற சேவை நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றை அழைத்து ஜூன் மாதத்தில் தொடர்கல்வி இயக்க ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அவற்றின் ஆலோசனைகள் பெறப்பட்டு தொடர் கல்வி செயல்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. சேவை நிறுவனங்கள் மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்கல்விப்படிப்பகங்களை நடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**அனைவருக்கும் கல்வி**

இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அனைவருக்கும் கல்வி என்ற இலட்சியத்தை வலியுறுத்தி அந்தியூர், குன்னத்தூர் ஆகிய இடங்களில் பிரச்சாரப் பேரணி மற்றும் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அறிவொளித் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று இப்பணியை மேற்கொண்டார்கள். வயது வந்த குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்க்க வேண்டும். 5-ஆம் வகுப்பு முடித்தவர்கள் 6-ஆம் வகுப்பில் சேர்ந்து படிக்கவேண்டும். 8-ஆம் வகுப்பு முடித்தவர்கள் 9-ஆம் வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்பதை விளக்கும் ஊர்வலங்கள், பேரணிகள் விளக்கக் கூட்டங்கள் கிராமங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

**வாழ்க்கைக் கல்வி**

தொடர்ந்து கற்பிக்கும் பணி நடைபெறுவதோடு விழிப்புணர்வுக் கல்வியும், பயிற்சிகளும் கற்போர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அதோடு மட்டுமின்றி அரசு நலத்திட்டங்கள் பற்றிய பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக யுனிசெப்' மற்றும் மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூலத்துடன் இணைந்து அரசு

நலத்திட்டமான சிடிடி வாட்சன் திட்டத்தில் தொடர் அறிவொளி கற்போர் பயன்பெறத் தகுந்த திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் குழந்தைகளுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்படும் வயிற்றுப்போக்கு நோய் பற்றியும், அதைத் தீர்க்கும் வழிமுறை பற்றியும், சுகாதாரப் பழக்கத்தைக் கடைப்பிடித்தல் பற்றியும் விளம்பரம் செய்யப் படும். இதற்காகக் கலைக்குழு நடிகர்கள் பயிற்சியளிக்கப் பட்டுள்ளார்கள்.

### பெண்கள் மேம்பாடு

பெண் கல்விக்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டு வருகிறது. பெண் சிசுக் கொலைத் தடுப்பு முயற்சியாக அதை வலியுறுத்தி பிரச்சாரங்கள், ஊர்வலங்கள், பேரணிகள் நடத்தப்படும். கிராமங்களில் மகளிர் குழுக்கள் அமைக்கப்படும். மாவட்ட அளவில் 30 மகளிருக்கு அரசுத் திட்டங்கள் சம்பந்தமாகப் பல் வேறு பயிற்சிகள் அளிக்கப்படும். வட்டார அளவில் தேர்ந் தெடுக்கப்பட்ட பெண் பிரதி நிதிகளுக்குப் பயிற்சி பெற்ற மகளிர் மீண்டும் பயிற்சியை விரிவுபடுத்துவார்கள். இதன் மூலம் ஏராளமான பெண்கள் பயன்பெற வாய்ப்பு ஏற்படும்.

### நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் சட்டக் கல்வி

காசு கொடுத்து வாங்கும் பொருள்கள் மற்றும் சேவையில் ஏற்படும் குறைபாடுகளைத் தீர்க்கும் வழிமுறைகள் பற்றிய கருத்தரங்கம், நுகர்வோர் குறை தீர் ஆணையம், அதன் செயல் பாடுகள், அணுகு முறைகள் பற்றி பயிற்சி தரப்படும். இலவச சட்ட உதவி முகாம்கள் மூலமாக ஆண், பெண் கற்போர்களுக்குச் சட்ட அறிமுகம் ஏற்படுத்தப் படும். சாலை விதிமுறைகள் குறியீடுகள் கடைப்பிடிக்கும் முறை பற்றிய பயிற்சி அளிக்கப் படும். இதன் மூலமாக விபத் துக்கள் தடுக்கப்பட்டு அறியாமை மூலம் ஏற்படும் இழப்புகள் காப்பாற்றப்படும்.

### சுகாதாரக் கல்வி

குடும்ப நலம், சுகாதாரம், சரியான முறையில் உணவு தயாரித்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர், எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கல்வி, டோக்ரா, சிபிசி.எஸ்., சிடிடிவாட்சன் ஆகியவை பற்றிய பயிலரங்கம் நடத்தி கற்போர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### அரசு நலத் திட்டங்கள்

அரசு நலத் திட்டங்கள் மக்களுக்குச் சரியான முறையில் சென்று சேர்ந்திட அதுபற்றிய பயிற்சி விரிவான முறையில் அளிக்கப்படுகிறது. அறிவொளித் தொடர்கல்வி இயக்கம் சார்பாக அனைத்துத் திட்டங்களடங்கிய புத்தகம் ஒன்று வெளியிடப் படுகிறது. கற்போர்கள் எளிதில் படித்துப் புரிந்துகொண்டு இதன்மூலம் தகுந்த பயனை அடையலாம். தொடர்கல்வியில் அரசு வழங்கும் உதவிகளை மக்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள கற்போர்களுக்கும் பொது மக்களுக்கும் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. கிராமத் தொடர்பாளர், படிப்பகப் பொறுப்பாளரின் மூலமாகக் கற்போரின் தேவைகள் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு உதவிகள் சரியான நேரத்தில் தற்போது மக்களுக்கு வழங்கப் பட்டு வருகிறது.



**விஞ்ஞானம் என்பது மனிதனின் அறிவை மட்டு மல்ல இயற்கையின் மீது அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத் தையும் அதிகரிக்கிறது.**

**—நேரு.**

### தொடர்கல்விச் சுவர்

மாவட்டம் முழுவதும் தொடர்கல்வி இயக்கத்தின் இலட்சியம், கொள்கைகள், பணிகள், கடமைகள் ஆகிய வற்றை விளக்கும் வகையில் தொடர்கல்விச்சுவர் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதில் தொடர் கல்வி சம்பந்தமான வாசகங்கள் எழுதப்பட்டு வருகிறது. இது கற்போர்கள் தங்கள் எழுதப் படிக்கும் திறனை வளர்க்கப் பெரிதும் உதவிகரமாயுள்ளது.

எழுத்தறிவிக்கும் உன்னத மான பணியைச் செய்வதோடு மட்டுமன்றி, மக்களின் வாழ் விலும், பொருளாதாரத்திலும் ஒளிவீசச் செய்து தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மாற்றி மற்ற மாவட்டங்களுக்கு முன்னோடியாகச் செயல் படுவதே தொடர்கல்வியின் நோக்கம், இலட்சியம்.

With Best Compliments From

RC - 2920113
TNETA-259
CST-441102

Phone: Mill : 60402
Res : 60681
Res : 60281
STD: 04297

T.M. PALANISAMY

## SRI DEVI RICE MILL

*Paddy & Rice Merchant*

CHENNIMALAI ROAD

UTTUKULI - 638 751

*With Best*

*Compliments From*

## INFRA TEX

PSG Mill Premises,

191, Main Road

PERUNDURAI - 638 052

Phone: 04294 - 20436, 20372, 21436

FAX: 21373

**P.M. Ramasamy**
Partner

Phone: 60455
STD : 04294

*With Best*
Compliments From

## MAHARAJA PLASTIC INDUSTRIES

*Mfrs.:*
"SURIYA" PVC Rigid Water Pipes

14, Railway Station Road,
K.K. Nagar
Uttukuli - 638 751
Periyar District

**K.M.S. PLASTIC**

14-B, R.S. Road, Uttukuli - 638 751

With Best Compliments From

## CIBI INTERNATIONAL

PSG MILL PREMISES
190-A, Main Road,
Perundurai - 638 052

Phone: 04294 - 20436
04294 - 20372
04294 - 21436

## CIBI EXPORTS

25, Bungalow Road,
Odakkadu
TIrupur - 638 602

Phone: 29296 - 29298
22329 - 20515



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ—ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP





